பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 01 சனிக்கிழமை (17.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 351

# புலிகள் மீது தடை விதிப்பதற்கு அரச உயர்மட்டத்தில் பரிசீலனை!

## ஜே.வி.பியை தன்பக்கம் வளைத்துப்போட்டு ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளத் திட்டம்

கொழும்பு, நவம்பர் 17

தனது வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கு போதிய எம்.பிக்களின் ஆதரவின்றித் தடுமாறும் அரசுத் தலைமை, பிரதான எதிர்க்கட்சிகளுள் ஒன்றான ஜே.வி.பியைத் தனக்கு ஆதரவாக வளைத்துப்போடும் முயற்சியாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை அறிவிப்பை எந்தநேரத்திலும் விடுக்கலாம் எனக் கொழும்பில் பரபரப்புச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தகைய தடை உத்தரவு ஒன்றை உடனடியாக விடுப்பது குறித்து அரசுத் தலைமை தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாளை மறுதினம் மாலை நாடாளுமன்றில் இடம்பெறுகின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த வரவு - செலவுத்திட்டத்தை முற்றாக எதிர்க்கக் கங்கணம் கட்டி நிற்கின்றன.

மற்றொரு எதிர்க்கட்சியான ஜே.வி.பியும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை கொள்கை அளவில் எதிர்ப்பதாக அறிவித்துள்ளது. ஆனால், நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக அந்தக் கட்சி வாக்களிக்குமா அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாமலேயே எதிர்ப்புக்காட்டுமா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

அரசுக்கு உள்ளேயே, அரசுத் தலைமைக்கு எதிரான புகைச்சல்கள் வலுத்துள்ள நிலையில், வரவு - செலவுத் திட்டத்தில் அரசுக்கு எதிராக முழு மூச்சில் வாக்களிப்பது என்று ஜே.வி.பி. தீர்மானிக்குமானால், இந்த அரசு கவிழக் கூடிய சூழல் உறுதியாகும்.

இந்தப் பின்னணியில் ஜே.வி.பியை வளைத்துப் போட்டு, வரவு - செலவுத் திட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுக் கழகச் சொத்து முடக்கம்

# தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை அல்ல; புலிகள் பேச்சுகளில் ஈடுபட நல்ல தருணம்

### — அமெரிக்கத் தூதுவர் ஓ பிளேக் —

கொழும்பு, நவ. 17

''தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு சொந்தமான அமெரிக்காவில் உள்ள சொத்துகளை முடக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையே தவிர, இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கை அல்ல.''

- இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்திருக்கிறார். கொழும்பில் உள்ள அமெரிக்க மத்திய நிலையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதமும் இவ்வருடம் ஏப்ரல் மாதமும் அமெரிக்க மத்திய புலனாய்வுத் தகவல் பணியகத்தினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நிதி மற்றும் பொருள் உதவிகள் என்பன தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வழங்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் - விடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறைக் கடலில் நேற்றிரவு குண்டுச்சத்தங்கள்

யாழ்ப்பாணம், நவ. 17

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நேற்றிரவு 10 மணி தொடக்கம் பாரிய குண்டுச் சத்தங்கள் கேட்டன.

இரு தரப்புகளுக்கிடையில் மோதல் இடம்பெறுவது போன்ற சத்தங்களுடன் படகுகள் ஓடித்திரியும் சத்தங்களும் கேட்டதாக அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சத்தங்கள் மோதல் காரணமாகவா, ஒத்திகை காரணமாகவா என்பது குறித்து அறிந்து கொள்ளமுடியவில்லை. (அ-1)

# 'பட்ஜெட்' நிறைவேறிய கையோடு அமைச்சரவை மாற்றமும் வருமாம்!

## மார்ச் - ஏப்ரலில் பொதுத்தேர்தலும் சாத்தியம் என்கிறார் டக்ளஸ்



கொழும்பு, நவ. 17

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டவுடன் அமைச்சரவையில் பாரிய மாற்றம் ஒன்று ஏற்படும். தொடர்ந்து 2008 ஆம் ஆண்டு மார்ச் - ஏப்ரல் மாத இடைவெளியில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம். இதற்கான சாத்தியக்கூறுகள் கூடுதலாக இருக்கின்றன.

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நேற்று நாடாளுமன்றத்தில் 'உதயன்' செய்தியாளருடன் உரையாடிய போதே அவர் இப்படிக் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூன்றாவது வரவு - செலவுத்திட்டம் நிச்சயமாக பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும். இதில் சந்தேகம் இல்லை. - என்றும் அமைச்சர் தேவானந்தா கூறினார்.

''நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டால் நாடாளுமன்றம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது. இது சரியான தகவலா?'' என்று அவரிடம் கேட்கப்பட்டது.

வரவு - செலவுத்திட்டத்தின் பின்னர் அமைச்சரவையில் ஒரு பெரிய மாற்றம் இடம்பெறவுள்ளது. அதே வேளை, மார்ச் - ஏப்ரல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனின் சடலம் நேற்றிரவு ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

தலையில் சூட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 10 மணியளவில் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த தங்கராசா சுஜீவன் (வயது-26) என்பவரின் சடலமே யாழ். பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எங்கு வைத்துச் சுடப்பட்டார் என்ற தகவல் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரிய வரவில்லை. (அ-1-78)

## திருமுறிகண்டியில் குண்டு வீச்சு! தனியார் படகுத் தொழிலகம் நாசம்!!

கிளிநொச்சி, நவ. 17

அரச விமானப்படையின் குண்டுவீச்சால் கிளிநொச்சி நகருக்கு தெற்காக உள்ள திருமுறிகண்டியில் உள்ள தனியாரின் படகுக் கட்டுமானத் தொழிலகம் அழிந்துள்ளது. அதில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளர்-என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

அரச விமானங்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.28 மணிக்கும் 6.35 மணிக்கும் இடையில் இரண்டுமுறை சோலை கண்ணாடி இழைப்படகுகள் உற்பத்தி நிறுவனம் என்ற தனியார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேசியப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு சகல கட்சிகளையும் கொண்ட தேசிய செயலகம்

### முப்படைகளின் முன்னாள் தளபதிகள் ஜனாதிபதியிடம் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

''நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமூகத் துறைகளுக்கும் தேசியப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்காகத் தேசியத் திட்டம் ஒன்றைத் தயார் செய்வதற்கான சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட தேசிய செயலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும். அத்துடன், இந்த முயற்சி முழுமையாக பயங்கரவாத ஒழிப்பும் அரசியல் தீர்வும் ஒன்றுக்கொன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கலைஞரை முதலில் கைது செய்க; புலிகளை ஆதரிப்பது தேசத்துரோகம்



## ஜெயலலிதா வலியுறுத்துகிறார்



சென்னை,நவ.17

விடுதலைப் புலிகளை எவர் ஆதரித்தாலும் அவர்கள் தேசத்து ரோகிகள் எனக் குறிப்பிட்டிருக்கும் அ.தி.மு.கவின் பொதுச்செயலர் செல்வி. ஜெயலலிதா, அக் குற்றச்சாட்டின் பேரில் தமிழக முதல்வர் கருணாநிதி உடன் கைது செய்யப்படவேண்டும் என வலி யுறுத்தி இருக்கின்றார்.

"புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இலங்கை இராணுவத்தின் விமானக் குண்டு வீச்சில் சிக்கி உயிரிழந்தமைக்கு இரங்கல் கவிதை எழுதியமைக்காக முதலில் கருணாநிதி கைது செய்யப்பட வேண்டும்" என வலியுறுத்தியிருக்கின்றார் செல்வி. ஜெயலலிதா.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங் களிலிருந்து பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தோர் ஜெயலலிதா முன்னிலையில் அ.தி.மு.கவினர் நேற்றுச் சென்னையில் இணைந்து கொண்டனர். பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத் துத் தெரிவித்தபோதே விடுதலைப் புலிகள் தொடர்பான தனது நிலைப் பாட்டை ஜெயலலிதா வெளியிட்டார். அ.தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து, தடையை மீறி சு.ப.தமிழ்ச்செல்வனின் மறைவுக்கான இரங்கல் பேரணியில் பங்கேற்கச் சென்று கைதாயிருக்கின்றமை குறித்து தமிழக ஊடகங்கள் சார்பில் வினவியதற்கு -

"தமிழ்ச்செல்வனுக்கு இரங்கல் கவிதை எழுதிய கருணாநிதி முதலில் கைது செய்யப் பட வேண்டும். அதற்குப் பிறகுதான் மற்றவர்கள் கைது செய்யப்பட வேண்டும். ஏனெனில் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கம். இதற்கு யார் ஆதரவு தெரிவித்தாலும் அது தேச விரோதமாகும். அதை ஒருபோதும் ஏற்க முடியாது. அத்தகைய சட்டத்தை மீறுவோர் மீது சமமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதில் பாரபட்சம் காட்டக்கூடாது.

### மாநில அரசைக் கலைக்க வேண்டும்

இந்த விடயத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத் தைச் சேர்ந்தவர் இறந்தமைக்கு கவிதை எழுதியதோடு, அதை அரசு செய்தி வெளியீடாகவும் வெளியிட்ட முதல் வர் கருணாநிதியை கைது செய்ய வேண்டும். ஆனால், அத்தகைய நடவடிக்கை ஏன் இன்னமும் எடுக்கப் படவில்லை என்பது வியப்பாக உள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இரங்கல் பேரணி நடத்துவது உள்ளிட்ட எத்தகைய ஆதரவு தெரிவிப்பதும் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் செயலாகும். இது தொடர்பாக எத்தகைய பொதுக் கூட்டம் நடத்தவும், பேரணி நடத்தவும் மாநில அரசு அனுமதி அளித்திருக்கவே கூடாது. அவ்வாறு அனுமதி அளித்திருந்தால், அம்மாநில அரசை மத்திய அரசு கலைக்கவேண்டும்" - என்றார் ஜெயலலிதா.

'பொடா' சட்டத்தின் கீழ் அ.தி.மு.க.ஆட்சிக் காலத்தில் ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ கைது செய்யப்பட்டமை மற்றும் நாகலாந்து தீவிரவாதிகளுடன் அப்போதைய பிரதமர் வாஜ்பாய் பேச்சு நடத்தியமை குறித்து கேட்டதற்கு, "விடுதலைப் புலிகள் விடயத்தில் அ.தி.மு. க.வின் நிலைப்பாட்டில் எப்போதும் மாற்றம் இல்லை" - என்று பதிலளித்தார் அவர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தடையை மீறி பேரணியில் பங்கேற்று கைதாகியுள்ள ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ கைதாகியுள்ளார். இன்னமும் அ.தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. அங்கம் வகிக்கிறதா என்று கேட்டதற்கு,"கூட்டணி என்பது தேர்தல் நேரத்தில் மேற்கொள்ளப்படுவது. அது குறித்து இப்போது பேசுவதில் எந்த அர்த்தமும் கிடையாது. கடந்த காலங்களில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க.வுடன் ம.தி.மு.க.தேர்தல் கூட்டணி வைத்திருந்தது. அப்போதெல்லாம் அக்கட்சி கூட்டணி வைத்துள்ள தலைவர்களிடம் இத்தகைய கேள்வியை யாரும் கேட்கவில்லை" - என்று அ.தி.மு.க. தலைவி கூறினார். (சி)

# புதுடில்லி நாடாளுமன்றில் கருணாநிதியின் கவிதைச் சர்ச்சை?

புதுடில்லி,நவ.17

விமானக்குண்டு வீச்சில் பலியான புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இரங்கல் கவிதை வரைந்த விவகாரத்தை இந்திய நாடாளுமன்றில் கொண்டுவந்து சர்ச்சையைக் கிளப்ப ஜெயலலிதாவின் அ.தி.மு.க. திட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இது தவிர விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள், நடமாட்டங்கள் என்றுமில்லாதவாறு தமிழகத்தில் அதிகரித்து விட்டன எனக் குற்றஞ் சுமத்தியிருக்கும் அ.தி.மு.க. அது விடயத்திலும் பிரச்சினையைக் கிளப்ப தீர்மானித்துவிட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றின் குளிர் காலத் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி வரையில் கூட்டத்தொடர் தொடரும்.

இந்த கூட்டத் தொடரின்போது ராஜ்யசபாவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்போகும் விடயங்கள் குறித்து அலுவல் ஆய்வுக் குழு ஆலோசனை நடத்தியது. துணை ஜனாதிபதியும் ராஜ்யசபா தலைவருமான ஹமீத் அன்சாரி தலைமையில் நடைபெற்ற இந்தத் கூட்டத்தில் அ.தி.மு.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவர் மைத்ரேயன் தங்களது கட்சி சார்பில் கிளப்பப்போகும் பிரச்சினைகள் குறித்துப் பேசினார்.

புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மறைவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி இரங்கல் தெரிவித்த விவகாரத்தை சபையில் அ.தி.மு.க.கிளப்பும் என்று அவர் குறிப்பிட்டார் எனத் தெரிகிறது.

"தடைசெய்யப்பட்ட இயக்கமான விடுதலைப்புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் தமிழகத்தில் அதிகரித்துவிட்டன. இது குறித்து மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோருவோம்" - என்றும் மைத்ரேயன் கூறினார் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# பங்களாதேஷில் சூறாவளி 242 பேர் உயிரிழப்பு

தென் பங்களாதேஷை, மணிக்கு 150 மைல் வேகத்தில் தாக்கிய பயங்கர சூறாவளிக்கு 242 பேர் பலியாகினர். தென் மேற்குக் கரைப் பிராந்தியத்தை நேற்று முன்தினம், கடும் மழையோடு 'சிடார்' என் னும் இச்சூறாவளி கடுமையாகத் தாக் கியது. கடல் கொந்தளிப்பு ஏற் பட்டது. அலைகள் சீற்றங்கொண்டு மேலெழுந்தனஎன்று அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அநேக வீடுகள் இடிந்து விழுந்து தரை மட்டமாகியுள்ளன. இடிபாடுகளுக்குள் சிக்கி 242 கிராமவாசிகள் உயிரிழந்துள்ளார்கள். சூறாவளி அனர்த்த அபாயத்தை யொட்டி, 6 லட்சத்து 50 ஆயிரம் கிராமவாசிகள் வெளியேற்றப்பட்டார்கள் என டாக்கா சூறாவளி கட்டுப்பாட்டுமைய அதிகாரி நாஹிட் சுல்தான் தெரிவித்துள்ளார்.

வேரோடு பிடுங்கப்பட்ட பாரிய மரங்கள் விழுந்தமையாலும் வீடுகள் பல தரை மட்டமாகின. பலர் கொல்லப்பட்டுள்ளனர். இடிபாடுகளால் பெருந்தொகையானோர் கடுங்காயங்களுக்கும் உள்ளாகினர். மரணமானோரின் எண்ணிக்கை இன்னும் அதி கமாக இருக்கலாம் என்றும் சுல்தானா எசோ சியேட்டட் பிரஸ் செய்தி முகவர் நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார். (சி)

# வீட்டுக் காவலில் இருந்து பெனாசிர் விடுதலை

இஸ்லாமாபாத்,நவ.17

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவியும் முன்னாள் பிரதமருமான பெனாஸிர் பூட்டோ வீட்டுத் தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஸ் முஷாரப் அவசர காலச் சட்ட அமுலாக்கத்தைப் பிரகடனப்படுத்தியமைக்கு ஆட்சேபனை தெரிவித்து கடந்த செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்த பெனாஸிர் திட்டமிட்டிருந்தார்.

இதையடுத்து செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் ஏழு நாள்களுக்கு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். பொலிஸார் இவரின் லாகூர் இல்லத்தைச் சுற்றி வளைத்திருந்தனர். ஆதரவாளர்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

தற்போது தடுப்புக்காவல் உத்தரவு நீக்கப்பட்டுவிட்டது என பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது. எனினும் பெனாஸிரின் வீட்டுக்கெதிரில் டசின் கணக்கான பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபட் டுள்ளார்கள்எனபியிஸி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

"பூட்டோவுக்கு எதிரான தடுப்புக் காவல் உத்தரவு அரசினால் வாபஸ் பெறப்பட்டது. இப்போது முதல் தாம் விரும்பிய இடங்களுக்கு அவரால் செல்லமுடியும்" எனகிழக்கு நகரான லாகூர் பொலிஸ் அதிபர் அப்தாப் சீமா ரொய்ட்டர் செய்திச் சேவை நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளார்.

"பெனாஸிர் பூட்டோவின் பாதுகாப்புக்காக பொலிஸார் அங்கு தொடர்ந்தும் நிலை கொண்டிருப்பார். எனினும் அவரின் நடமாட்டத்துக்கு எவ்வித கட்டுப்பாடு மில்லை" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மணல் திட்டில் அந்தரித்த அகதிகள் மீட்பு

மண்டபம்,நவ.17

தமிழக அரிச்சல் முனைக்கடற் பரப்பில் மணல்திட்டில் - தத்தளித் துக் கொண்டிருந்த ஈழத்தமிழ் அக திகளை மீட்ட இந்தியக் கடலோ ரக் காவற்படையினர் அகதிகளை மண்டபம் அகதிகள் முகாமில் சேர்த்துள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பிலிருந்து படகில் புறப்பட்ட சகாய மலர், ஆரோக்கிய சீலன், ஆரோக்கிய சீலி, ரோஸ்லீன் ஆகிய ஈழத் தமிழ் அகதிகளைப் படகோட்டிகள், தமிழக அரிச்சல் முனைக் கடற் பரப்பின்-இரண்டாம்மணல்திட்டில் இறக்கிவிட்டு கரை தப்பி விட்டனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

உண்ண உணவின்றி பரிதவித்திருந்த அகதிகளை, கடலோர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடலோரக்காவல் படையினர் மீட்டு மண்டபம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர் என்றும் -

பொலிஸாரின் தீவிர விசாரணைக்குப் பின்னர் அகதிகள் அனை வரும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கவைக் கப்பட்டுள்ளனர் என்றும் - கூறப்பட்டது. (சி)

உள்ளே....

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களை வாழ்த்தி பிரசுரமாகியுள்ள சிறப்பு மலரின் பிரசுரத்திகதி 17.11.2007 ஆகும். சில பிரதிகளில் [illegible].2007 என்று [illegible] அச்சாகி[illegible]து

## மரண அறிவித்தல்

### செல்லையா சச்சிதானந்தம்

*இளைப்பாறிய கிராமசேவகர்-மல்லாகம், புத்தளம் (முந்தல்)*



அளவெட்டி கேணிக்கரையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய செல்லையா சச்சிதானந்தம் அவர்கள் (12.11.2007) அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா, மனோன்மணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் தோத்திரமலரின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/ யூனியன் கல்லூரி) அன்புக்கணவரும், ஜனீதா, கோபிநாத், மேனகா, கஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னபூரணி, காலஞ்சென்ற இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கைலாசபதி, இராசம்மா தம்பதியினரின் மருமகனும், சயந்தனின் (லண்டன்) அன்பு மாமனாரும் பொ.சுந்தரலிங்கத்தின் (தெல்லிப்பளை சுந்தரம் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் தற்போது விஷால் பான்சி ஊழியரும்) சகலனும், காலஞ் சென்ற சிவகுருநாதன், நடேசராணி, தங்கம் ஆகியோரின் மைத்துனரும், கைலாசபதி, கோபிகா, துளசிகா ஆகியோரின் பெரியப்பாவும், இராகவன், இராதை, இராமகிருஷ்ணன் ஆகியோரின் சித்தப்பாவும், பிரபாகரன், கிருபாகரன் ஆகியோரின் தாய்மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.11.2007) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

T.P : 112622940
(0044)07956362731
(0044)07984289681 (67978)

தகவல்
மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி பாலசிங்கம்



மலேசியாவை பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பாலசிங்கம் 15.11.2007 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு திருமதி நாகலிங்கத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிரவேலு (பொறியியலாளர்) மற்றும் கல்வீட்டு பாக்கியத்தின் மருமகளும், கதிர் (பொறியியலாளர், லண்டன்)அவர்களின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான மனோகரன், செல்வசிங்கம் மற்றும் நடராசா (மலேசியா), திருமதி செல்வராணி தேவராசா (ஆசிரியை விக்ரோறியாக் கல்லூரி )ஆகியோரின் அன்புச் சகோதரியும், நளினரஞ்சனியின் அன்பு மாமியும், துவாரகா, ஆகாஷ், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி பிருந்தா இந்திரகுமார், செல்வி பிரியங்கா தேவராஜா ஆகியோரின் பெரியதாயாரும், மலேசியாவில் வசிக்கும் குகன், குபேரன், நாதரூபினி ஆகியோரின் பெரியத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.11.2007) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொரளை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*
*கதிரவேல் பாக்கியம் (மாமி).*

### சுந்தரலிங்கம் சுதர்சன்

ஆஸ்பத்திரிவீதி, மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சுதர்சன் 29.10.2007 திங்கட்கிழமை டோகாவில் அகாலமரணமானார்.

அன்னார் சுந்தரலிங்கம்-செல்வராணி தம்பதியரின் அன்பு மகனும், சுதர்சினி (மக்கள் வங்கி, சங்கானை), சுலக்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.11.2007) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி, வதிரி, திருஇருதயக் கல்லூரியில் அண்மையில் முறைசாராக் கல்விப் பிரிவின் மனைமுகாமைத்துவத் தொழிற்பயிற்சிக் கண்காட்சி வடமராட்சி வலய முறைசாராக் கல்விப்பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை வண.சி.ஆனந்தகுமார், கல்லூரி அதிபர் வ.கணபதிப்பிள்ளை ஆகியோர் வரவேற்கப்படுவதையும் கரவெட்டி அந்தோனியார் ஆலய அருட்தந்தை மங்கள விளக்கேற்றிக் கண்காட்சியை ஆரம்பித்துவைப்பதையும் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கண்காட்சி மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். [படங்கள்: சுந்தர]

# ஊர்காவற்றுறை - காரைநகர் பாதைச்சேவை: கட்டணம் எதுவும் அறவிடப்படுவதில்லை

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் தகவல்

நல்லூர், நவ.17

ஊர்காவற்றுறை - காரைநகர் பகுதிக்கு இடையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் படகுப் பாதையில் பயணிக்கும் மக்களிடமோ அல்லது அவர்களால் கொண்டு செல்லப்படும் வாகனங்களுக்கோ பணம் எதுவும் அறவிடப்படுவதில்லை. யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம் பொறியியலாளர் இதனைத் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட சேவையின் போது பணம் அறவிடப்படுவதாக கூறப்பட்டதை யடுத்து பிரதம பொறியியலாளரிடம் இவ்விடயம் பற்றிக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாதைச் சேவைக்கு ஒரு போதும் கட்டணம் எதுவும் அறவிடப்படுவதில்லை எனவே. இச்சேவையை பெறும் மக்களோ அல்லது அவர்கள் கொண்டு செல்லும் வாகனங்களுக்கோ கட்டணம் எதுவும் செலுத்த வேண்டாம்.

இதேவேளை - இச்சேவையின் போது கட்டணம் எதுவும் அறவிடும் பட்சத்தில் அதனை எனக்கு அறியத்தரும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (203-111)

# யாழ்.போதனா வைத்தியசாலை 10ஆம் வார்ட்டில் உள்ள மலசல கூடங்கள் சேதம் எனத்தெரிவிப்பு

நவாலி, நவ.17

யாழ்.போதனா வைத்தியசாலையின் 10ஆம் வார்ட்டில் உள்ள மலசலகூடங்கள் உடைந்து சேதமுற்றுள்ளதால் நோயாளர்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மலசலகூடத்தின் கதவுகள் கழன்று உடைந்து திறந்த நிலையில் உள்ளன. முகம் கைகால் கழுவுவதற்கான பேசின்கள் கழற்றி எறியப்பட்டுள்ளன. தண்ணீர் பைப்புகள் உடைந்து எந்நேரமும் பலத்த சத்தத்துடன் தண்ணீர் வெளியே ஓடிய வண்ணமுள்ளது.

தண்ணீரை சேமித்து வைப்பதற்கு பெரிய பரல்களோ தொட்டிகளோ இல்லை. இரவு 10 மணியின் பின்னர் தண்ணீர் பூட்டப்பட்டு காலை 5 மணிக்கே திறந்து விடப்படுகிறது.

இந்த இடைவெளிக்குள் மலம், சலம் கழிப்பவர்கள் தண்ணீர் இன்றி பெரும் அவஸ்தைக்குள்ளாகி வருகின்றனர்.

இதே வேளை - ஏனைய பல வார்ட்டுகளின் மலசல கூடங்கள் சுகாதாரத்திற்கேற்ற முறையில் சுத்தமாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 10 ஆம் வார்ட்டில் உள்ள மலசல கூடங்களைத் திருத்தி அமைப்பதில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் கவனமெடுப்படு அவசியமானதாகும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்மந்தப்பட்டவர்கள் இவற்றைப் பார்வையிட்டு விரைவில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (203-100)

# ஜீ.சி.ஈ சாதாரண மாணவருக்கு தென்மராட்சியில் விசேட வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ.17

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பாடங்களுக்கான விசேட வகுப்புகள் அடுத்த வாரம் வலயக் கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்படவுள்ளன.

வணிகக்கல்வி, விவசாயம், மனைப்பொருளியர் ஆகிய பாடங்கள் தெரிவு செய்யப்பட்ட ஐந்து நிலையங்களிலும், பாடசாலைகளிலும் வகுப்புகள் நடாத்தப்படவுள்ளன.

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய ஐந்து நியைங்களில் ஏனைய பாடசாலை மாணவர்களை இணைத்தும் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளில் துறைசார் உத்தியோகத்தர்கள் சென்றும் விசேட வகுப்புகளை நடாத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (203-207)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் அபிவிருத்திக்கு 17 லட்சம் ரூபா ஒதுக்கீடு

நல்லூர், நவ.17

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தி நடவடிக்கைக்ளை மேற்கொள்வதற்கென நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 17 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நல்லூர் பல.நோ.கூ சங்கத்திற்கு கணனி மற்றும் உபகரணங்களுக்காக ஒரு லட்சத்து 50 ஆயிரமும் கொக்குவில் மேற்கு மீனவர் சங்க தளபாட கொள்வனவுக்கு ஒரு லட்சமும் கொக்குவில் இந்து மயான அபிவிருத்திக்கு ஒரு லட்சம்மும் முடமாவடி ஞானவைரவர் சனசமூக நிலையம் பொது வேலைகள் புனரமைப்புக்கு ஒரு லட்சமும், யாழ்.மாநகராட்சிமன்ற விளையாட்டுக் கழகத்திற்குரிய விளையாட்டு உபகரணங்களுக்கு 50ஆயிரம், அரியாலை கலைமகள் சனசமூக நிலைய பாலர் பாடசாலை கற்றல் உபகரணங்களுக்கு 50 ஆயிரமும் அரியாலை சனசமூக நிலைய சிறுவர் பூங்கா புனரமைப்புக்கு 75 ஆயிரமும் வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மகாத்மாஜி சனசமூக நிலைய புனரமைப்புக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரமும் நல்லூர் பொதுக் கிணறுகள் தண்ணீர்த்தாங்கிகள் திருத்த வேலைகளுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரமும் ஒதுக்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் சர்வதேச தமிழ் மாணவர் ஒன்றியத்திற்கு கணனிகள் தளபாடங்களுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரமும் பெண்கள் கலாசாரநிலைய கணனி இயந்திர கொள்வனவுக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரமும் தொழில் நுட்பக் கல்லூரி கணனி மற்றும் தளபாடங்கள் கொள்வனவுக்கு ஒரு லட்சத்து 25ஆயிரமும்-

யாழ்.பல்கலைக்கழக நாடகத்துறைக்கான இசைக்கருவிகள் கொள்வனவுக்கு ஒரு லட்சமும் யாழ்ப்பாண ஆரம்ப தொழில்நுட்பக் கல்லூரி கணனி தளபாடங்களுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரமும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் மன்றத்திற்கு கணனி மற்றும் தளபாடங்களுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (203-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலகம் இடம் மாற்றம்

யாழ்.பிரதேச செயலக கட்டடத்தில் இயங்கி வந்த மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி பணிமனை கடந்த 14ஆம் திகதி தொடக்கம் காட்டுக்கந்தோர் வீதியிலுள்ள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தென்மராட்சி பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரியாக கடமையாற்றிய சின்னத்தம்பி சிவகரன் மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரியாக பதவியுயர்வு பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

# நிகழ்வுகள்

வடமராட்சி, நவ.17

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் வடமராட்சி மத்திய மகளிர்கல்லூரி முறைசாராக் கல்விப்பிரிவு நடத்தும் மனை முகாமைத்துவ தொழிற்பயிற்சிக் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி கா.சுகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-160-70)

* * *

வலிவடக்கு, நவ.17

ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் சி.நாகையா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ் கழக 14 வலயத் தலைவர் லயன் சுந்தரேஸ்வரனும் மானிப்பாய் வட்ட லயன் தலைவர் த.ஸ்ரீ விமலேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் அ.மு.அருணாசலம், போதகர் அருள்திரு.இராஜ்குமார், கிராம அலுவலர் திருமதி.பிறேசிலா ஆகியோரும் கலந்து கொள்வர். (203-86)

* * *

கரவெட்டி,நவ.17

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய சின்னத்தம்பி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் கலந்துகொள்வர். திருமதி சாந்தினி சிவசுவாமி மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (203-70)

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான புதியபாடத்திட்ட மறுசீரமைப்பு செயலமர்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகியது. இன்று சனிக்கிழமையும் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வே[illegible] அறிவித்துள்ளார். (203-207)

# சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம்

வலிதென்மேற்கு, நவ.17

மாரீசன் கூடல் மடுமாதா சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் ஒன்று மாரீசன்கூடல் கிராமத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாஜத்தின் மகளிர் குழுவின் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெற்ற இதன் அங்குரார்ப்பண கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது. (203-135)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.17

மண்டைதீவு றோமன்கத்தோலிக்க வித்தியாலயத்தில் நிலவும் அதிபர் பதவி வெற்றிடத்திற்குத் தகுதியானவர்களிடம் இருந்து தீவக வலயக்கல்வி அலுவலகத்தால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதிபர் தரம் 2 -II, III இற்கு மேற்பட்டவர்களும் ஆசிரியர்தரம் 2-II இற்கு மேற்பட்ட தகைமையுடையவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

தகுதியுடையோரை டிசெம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். (203)

டெங்குக் காய்ச்சல்

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பருவ மழையைத் தொடர்ந்து டெங்குக் காய்ச்சல் பரவி வருகிறது. இந்த நோய்க்கு தடுப்பு மருந்து எதுவும் இல்லாத காரணத்தால் நோய் தொடர்பாக விழிப்பாக இருப்பதும், நோய் ஏற்படாமல் பாதுகாப்பாக இருப்பதும் முக்கியமானதாகும். இதற்கு முக்கியமாக எமது சுற்றாடலில் நுளம்புகள் பெருகாமல் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். எனவே டெங்குக் காய்ச்சல் பற்றி நாங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசிய மானதாகும்.

சுகாதாரத் திணைக்களம்

care

Disasters Emergency Committee

(சி/54392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சிலுவைக் கன்னியர்களின் சுகநல நிலையப் பணியின் வெள்ளிவிழா

1982 - 2007


## அர்ப்பணிப்புடன் எம்மை வழிநடத்திய அருட்சகோதரிகள்












சுவிற்ஸ்லாந்து நாட்டின் மென்சிங்கன் என்ற இடத்தைச் சார்ந்த திருச்சிலுவைக் கன்னியர் யாழ் மறைமாவட்டத்தில் பணி புரிவதற்காக அதி. வந்தனைக்குரிய ஆயர் ஜோண். அல்பிறட் கியோமர் அவர்களின் அழைப்பை ஏற்று இந்தியாவில் இருந்து 1930ல் தமது பணியை அரச வைத்தியசாலையில் ஆரம்பித்தனர். இப்பணியைப் பின்னர் யாழ் அரசினர் பொது வைத்திய சாலையின் நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்து நடாத்தி வந்தனர். அதே சமயம் கொழும்புத்துறையிலுள்ள புனித வளனார் முதியோர் இல்லத்தையும் அவர்கள் பொறுப்பேறறனர்.

கன்னியர்களின் தாய்மடம் யாழ். கடற்கரை வீதியில் விஸ்தரிக்கப்பட்டு, சுதேசிகளை இறையழைத்தலுக்கு உருவாக்கும் பணியினையும் மேற்கொண்டனர். மேதகு ஆயர். கியோமரை தொடர்ந்து பணியேற்ற மேதகு ஆயர் ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளையவர்கள் இதில் தன் மேலான அக்கறையைச் செலுத்தி இலங்கையில் ஒரு புதிய மாகாணத்தையும் மாகாணத் தலைவியையும் உருவாக்க வழிவகுத்தார். இந்த வகையில் அருட் செல்வி அலோஷியா றூஸ்லி முதல் மாகாணத் தலைவியானார்.

அரச பொது வைத்தியசாலைகளில் அருட்கன்னியர்கள் சேவை செய்வதை 1963ல் அரசாங்கம் நிறுத்தியதையடுத்து ஆயரவர்கள் கன்னியரை கொழும்பு புனித. மைக்கல்ஸ் வைத்தியபணிமனைகளில் பணிசெய்ய வழிகாட்டினார். அருட்சகோதரி அலோசியாவைத் தொடர்ந்து சுதேச மாகாணத் தலைவியாக அருட்சகோதரி யசிந்தா மரியாம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் மாகாணத் தலைவி அருட்சகோதரி யசிந்தா, அருட்சகோதரி எட்முண்டா மற்றும் அருட்சகோதரிகள் முன்நிலையில் திருச்சிலுவை சுகநலப்பணிமனைக்குரிய அடிக்கல் நாட்டப்பட்டது. அதே ஆண்டு கார்த்திகை 17ம் திகதி அருட்சகோதரிகள் எட்முண்டா, இசபெல் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பிலும் முயற்சியிலும் திருச்சிலுவை சுகநலநிலையப் பணி நிறைவுற்று மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கிலுள்ள மக்களின் குணமாக்கலுக்கான நடிபிக்கையின் அடையாளமாக இந்த வைத்திய நிலையம் விளங்கியது. மதிப்புக்குரிய அருட்சகோதரி Dr. இமாகுலேற் யோசப் 1983ல் நோயாளர்களைப் பொறுப்பேற்றார். நோயாளர்களின் உள்ளத்தை தொடும் அளவுக்கு அவரது குணமாக்கும் பணி அமைந்தமையால் பெருந்தொகையானவர்கள் எமது நிலையத்திற்கு ஈர்க்கப்பட்டார்கள்.

வேறு வைத்திய ஆலோசகர்களும் தம் சேவையை எமக்கு வழங்கினர். 40 படுக்கைகள் அடங்கிய எமது சிறிய வைத்தியசாலை படிப்படியாக நிர்வாகத் திறமையுடனான உறுதியுடன் செயலாற்றிய அருட்சகோதரிகள் மற்றும் வைத்தியர் பணியாளர்களின் சேவையால் கடந்த 25 வருடங்களாக. செயற்பட முடிந்தது. நிரந்தரமற்ற அரசியல் சூழ்நிலை, இனக்குழப்பங்களால் பாதிக்கப்பட்ட நிலையிலும்கூட எமது நிலையப் பணியைத் தொடர்ந்து நடத்த முடிந்தது. எவ்வேளையிலும் நாம் இறைவனின் பாதுகாப்பையும், பராமரிப்பினையும் உணர்ந்தோம்.

1995ல் பெரும் திரளான மக்களின் இடப்பெயர்வின் போது நாமும் எம்மால் கொண்டு செல்லக் கூடிய பொருட்களுடன் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டோம். இக்காலகட்டத்தில் பெறுமதிவாய்ந்த வைத்திய உபகரணங்களை இழக்க நேரிட்டது. ஆயினும் கடவுளின் துணையாலும் எமது சகோதரிகள், நலன் விரும்பிகளது சளைக்காத முயற்சியினாலும் எமது சுகநலநிலையம் தனது சேவையினைத் தொடர்ந்தது. இவ்விடத்தில் 1996ல் அருட்சகோதரி கிரேஸ் அந்தோனிப்பிள்ளை அவர்கள் மற்றைய அருட்சகோதரிகளுடனும் பணியாளர்களுடனும் இவ் வைத்திய மனையை மீளவும் ஒழுங்கமைக்க ஆற்றிய சேவையை நன்றியுடன் நினைவுகூர்கின்றோம்.

2000ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு தடவை சில்லாலைக்கு இடம்பெயர நேரிட்டது. அங்கிருந்து வெவ்வேறு இடங்களுக்கு வெவ்வேறு விதங்களில் இதன் சேவை விஸ்தரிக்கப்பட்டது. மின்சாரம் இல்லாத அக்காலகட்டத்தில் அதிகளவு எண்ணிக்கையில் புதிதாகப் பிறந்த குழந்தைகள் மண்ணெண்ணெய் விளக்கு ஒளியிலேயே இவ்வுலகினைக் காண முடிந்தது

நடமாடும் மருத்துவ சேவையிலீடுபட்டவர்கள். தூர இடங்களுக்கும். பின்தங்கிய கிராமங்களுக்கும் சென்று இடம்பெயர்ந்தவர்களின் இழப்பிலும், வேதனையிலும் தாமும் ஒருவராகப் பங்கு கொண்டனர். அருட்சகோதரி எட்முண்டா பவரின் கனவாக இருந்த இந் நிலையக் கட்டிட, விஸ்தரிப்பு அதற்குரிய நிதி, திட்டம், என்பன கையிலிருந்தும் அவரின் கனவு இன்று வரை உணரப்படவில்லை. பல பகுதிகளில் இருந்தும் பல சவால்களுக்கு முகம் கொடுத்த அருட்சகோதரி இமாகுலேற் ஜோசப் (மாகாணத் தலைவி) அவர்களின் தளராத முயற்சியினாலும், துணிச்சலினாலும் இன்று நிறைவேறியுள்ளது. இப்பணி நிறைவடைய தமது கடின உழைப்பை பல வழிகளிலும் வழங்கிய அனைத்து அருட்சகோதரிகளையும் நினைவு கூர்கின்றோம். விசேட விதமாக இப்பணிக்கு கடுமையாக உழைத்த அருட் சகோதரிகள் லூசியா ஜோசப், கிளேயா சுவானி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எமது பணியில் தாராள சிந்தையுடன் உதவிய உள்நாட்டு, வெளிநாட்டு கொடையாளர்கட்கும் பிரதான திட்ட அமைப்பாளர் அருட்திரு வேதநாயகம் அ.ம.தி. பொறியியலாளர் திரு. திருச்செல்வம், மேற் பார்வையாளர் திரு. செல்வக்குமார், கட்டிட நிறைவேற்புப் பணியை சிரமேற் கொண்ட திரு. ஆனந்தன் அவரது நம்பிக்கைக் குரிய அதிக ஒழுக்கமுள்ள பணியாளர்களுக்கும் எமது மடத்திலும், சுகநல நிலையத்திலும் பணியாற்றும் அருட் சகோதரிகள், வைத்திய நிலையப் பணியாளர்கள், ஊழியர்கள், தாதிய மாணவர்கள், அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம். இத் தருணத்தில் யாழ் மண்ணில் 25 வருட யூபிலி நினைவு கூறும் ஹோலிக்கிராஸ் அங்கமாகிய நாம் சிலுவையின் வழி பின் சென்று யேசுக் கிறிஸ்துவில் சங்கமிக்க புதுவசந்தத்தை நோக்கிய புரட்சிப் பாதையில் நம் சுவடுகளை பதிக்கின்றோம்.

## யாழ் ஆயர்

கடந்த 25 ஆண்டுகளில் எமது மண்ணில் நடைபெற்ற போர் அவலங்கள் இடப்பெயர்வுகள் பணியாற்ற முடியாத நிலை மருந்துகளையும் வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை என்பவற்றிலும் இவர்கள் சளைக்காது பணியாற்றியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

## மன்னார் ஆயர்

யாழ் நகரில் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவப் பணி மையத்தின் மூலமாக கிறிஸ்துவின் பாதையிலே குணமாக்கும் நற்செய்திப் பணியை எம் மத்தியிலே கடந்த 25 ஆண்டுகள் ஆற்றியுள்ளனர்.

தங்கள் ஸ்தாபகரின் இலட்சியப் பாதையில் மேலும் பல்லாண்டுகள் பயணித்து சிறந்த சேவையாற்றிட எனது செபத்துடன் கூடிய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

## திருமலை மட்டு நகர் ஆயர்

அருட்சகோதரி இமாக்குளேற் ஜோசப் டாக்டராக பணி ஏற்ற காலம் ஒரு பொற்காலம் ஆகும். சொந்தமாக டாக்டரை வைத்திருக்காமல் வைத்திய நிலையம் நடத்துவது மிகவும் கடினமானது. இவர் டாக்டராக பணியாற்றிய காலத்தில் தொடக்க முதல் முடிவுவரை அனைத்துப் பணிகளையும் கன்னியர்களே நிறைவேற்றியது குறிப்பிடப்பட வேண்டியது. திருச்சிலுவைக் கன்னியர்கள் இன்று ஆற்றுகின்ற பணி நிச்சயமாக பாராட்டப்பட வேண்டியது. பாரிய இடப்பெயர்வின் போது கிளாலிக் கடலால் வைத்திய நிலையப் பொருட்களைக் கொண்டு சென்று திருப்பி வந்த அனுபவம் அவர்களுக்கு மறக்கப்பட முடியாத அனுபவமாகும்.


நித்திய அர்ப்பணம்

இதோ என்னையே நான் சமர்ப்பிக்கின்றேன் உன் அன்பென்னும்
தூரிகையில் உன் உள்ளங் கையில் ஓவியமாய் என்னை
எப்பொழுதோ வரைந்தீர் நான் உருவாகுவதற்கு முன் தானே அற்புத
ஓவியரே நீர் வரைந்த உலகின் தலை சிறந்த ஓவியம் நான்
அல்லவா ஆணி பதிந்த உம் கரங்களில் பத்திரமாய் ஜீவ சிற்பமாய்
உமது நாடித் துடிப்பாய் நான் இருக்க நீர் எனக்கு தந்த உம்
சிலுவை தான் எனது உயிர் ஓவியம்
உன் குணமளிக்கும் பணியை நான் தொடர அருள்வாய்


சத்திர சிகிச்சையின் போது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கக் கட்டுப்பாடு, விதிமுறைகள் பின்பற்றப்பட்ட வலிகாமம் வலய உதைபந்தாட்டப் போட்டிகள்!


18 வயதுப் பிரிவில் வெற்றி பெற்ற மகாஜனா அணி

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவடிந்து மாவட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தாண்டு இடம்பெற்ற 16 வயது 18 வயதுப் பிரிவுப் போட்டிகளில் சில விடயங்களைச் சேகரிக்கக்கூடிய சந்தர்ப்பம் எமக்குக் கிடைந்தது.


மகாஜனா வீரன் ஜவாகர் (18வயது)

வலிகாமம் வலய உதைபந்தாட்டப் போட்டியென்பது பெரும் போர்க்களமாகவே கடந்த காலத்தில் அமைவது வழக்கமாகும். இந்நிலை அண்மைக் காலத் தில் பெரும் மாற்றம் கண்டுள்ளது. குறிப்பாக இம்முறை சிறப்பாகப் பூர்த்தி அடைந்துள்ளது. இந்நிலைமைக்கு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா, அதிபர் எஸ்.தனபாலசிங்கம், மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பொறுப் பாசிரியர்கள் எனப் பல ரும் ஒழுங்கு கட்டுப்பாட்டில் முழுப் பொறுப்பும் எடுத்து செயற்பட்டு பெரும் பாராட்டையும் பெற்றுகொண்டனர்.

விளையாட்டுப் போட்டி ஆரம்பமாக முன்னர் ''மார்ஷல்'' நிலையத்திற்கு அழைக்கப்பட்டு, உரிய ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு, அடையாளம் இடப்பட்டு பின்னரே மைதானத்தில் இறங்க அனுமதிக்கப்பட்டார்கள்.

ஆரம்பப் போட்டிகள் முதல் இறுதிப் போட்டிகள் வரை இந்தச் செயற்பாடு எல்லா மைதானத்திலும் சீராகக் கடைப்பிடிக்கப்பட்டு ஒழுங்கு முறைகள் கடுமையாகப் பேணப் பட்டன.

**16 வயதுப் பிரிவுப் போட்டிகள்**

16 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் இந்துக் கல்லூரி இறுதிப் போட்டிவரை 32 கோல்களைத் தமக்கு எதிராக மோதிய அணிகளுக்குப் போட்டுள்ளது.

முதல் சுற்றில் தமக்கு எதிராக விளையாடிய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு 12 கோல்களை அடித்து சாதனை படைத்ததைப் போன்று இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கு எதிராக 7 கோல்களையும் போட்டார்கள். அரையிறுதி ஆட்டம் வரை எந்தவொரு எதிரணிப் பாடசாலையும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குக் கோல்கள் எதனையும் போடவில்லை. எனினும் இறுதிப் போட்டியில் அருணோதயாக் கல்லூரி வீரன் மயூரதன் ஒரு கோலை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அடித்து அந்தச் சாதனையைத் தடுத்தார்.

# பாடசாலை உதைபந்தாட்ட அணிகளின் சாதனைகள் பற்றிய ஒரு பார்வை...

**மானிப்பாய் இந்து 32 கோல் போட்டது**

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிரணியினருக்கு அடித்த 32 கோல்களில் 13 கோல்களை அந்த அணியின் வீரர் நிரோஜன் அடித்துச் சாதனை படைத்தார்.அந்த அணியின் ஏனைய வீரர்களான கனிஸ்டன் - 07, ஸ்ரீபன் - 05, மதுராஜ் - 02, அஜித் - 02, ஜீவன்- 01 கோல்களையும் அடித்துள்ளனர்.

இரண்டாம் இடத்தைப் பெற்ற அருணோதயாக் கல்லூரி மொத்தமாகத் தமக்கு எதிரான அணியினருக்கு 09 கோல்களை அடித்துள்ளார்கள். எதிரணியினர் 08 கோல்களை இந்த அணிக்கு எதிராக அடித்துள்ளார்கள். இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 7 கோல்களையும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 1 கோலையும் அருணோதயாக் கல்லூரிக்கு எதிராக அடித்துள்ளது.


16 வயதுப் பிரிவில் வெற்றி பெற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி

அருணோதயாக் கல்லூரி சார்பில் மரிய டெறன்ஸ் 6 கோல்களையும் கிறேசியன், சபேசன், மயூரதன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் அடித்துள்ளார்கள்.

3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட தெல்லிப்பழை யூனியன் கல்லூரி போட்டிகளின்போது எதிரணிக்கு 5 கோல்களை அடித்துள்ளார்கள். இதில் இராகுலன், யோகிறேசியன் ஆகியோர் தலா இரண்டு கோல்களையும் கிசாந்தன் ஒரு கோலையும் போட்டனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அரையிறுதி ஆட்டம் வரை முன்னேறிய போதிலும் யூனியன் கல்லூரிக்கு எதிராக முதல் சுற்றுப் போட்டியில் மட்டும் ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது. மதி அந்தக் கோலைப் போட்டார். அத்துடன் காலிறுதிப் போட்டியில் சமநிலை உடைப்பு உதை மூலம் மகாஜனாக் கல்லூரிக்கு எதிராக நான்கு கோல்களையும் பெற்றுக் கொண்டது.

காலிறுதி ஆட்டம் வரை முன்னேறிய மகாஜனாக் கல்லூரியினர் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்கு எதிராக நான்கு கோல்களைப் போட்டார்கள். இந்தக் கோல்களை செந்தூரன், கபிலன், சங்கீத், கோகுலன் ஆகியோர் போட்டார்கள். அத்துடன் காலிறுதி ஆட்டத்தில் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரிக்கு எதிராகச் சமநிலை உடைப்பு உதை மூலம் 3 கோல்களையும் மகாஜனாக் கல்லூரி போட்டது.


மானிப்பாய் வீரன் நிரோஜன் (16வயது)

அராலி இந்துக் கல்லூரி முதல் சுற்றில் மட்டும் மூன்று கோல்களைப் பெற்றுக் கொண்டது. இதனை ரமணன் முதல் சுற்றில் அடித்தார். இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இரண்டு கோல்களை மட்டும் போட்டது. முதல் சுற்றில் தனக்கு எதிராக விளையாடிய அருணோதயாக் கல்லூரி, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு எதிராக இந்தக் கோல்கள் போடப்பட்டன. மரியதாசன், றஜிதன் ஆகியோர் இந்தக் கோல்களைப் போட்டனர்.

**விளையாட்டு அரங்குகளில்**

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் ஒரு கோலை மட்டும் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரிக்கு எதிராகப் பெற்று இருந்தது. அதனை சயந்தன் போட்டார்.

முதல் சுற்றிலேயே வெளியேறிய பாடசாலைகளில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஒரு கோலை மட்டும் தனக்கு எதிராக விளையாடிய புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு எதிராகப் போட்டது. இதனை பாரத்தீபன் அடித்தார்.

ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி என்பன இந்தப் போட்டிகளின் போது கோல் எதனையும் பெறவில்லை.

**எட்டுக் கோல் போட்டார் மகாஜனாவின் ஜவாகர்**

18 வயதுப் பிரிவில் மகாஜனாக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வணி முதல் சுற்றில் எதிரணிக்கு எதிராகப் 11 கோல்களையும் காலிறுதியில் ஒரு கோலையும் போட்டது. அரையிறுதி ஆட்டம், இறுதி ஆட்டம் ஆகியவற்றில் சம நிலை உடைப்பு உதைகள் மூலம் பெறப்பட்ட 9 கோல்களுடன் மொத்தம் 21 கோல்களை மகாஜனாக் கல்லூரிஅணிபோட்டது.

இதில் மகாஜனாக் கல்லூரி வீரன ஜவாகா எட்டுக் கோல்களைத் தனதுஅணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

*(மிகுதி அடுத்தவாரம்..)*

**விண்ணன்**

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

*(15.11.2007 முதல் 29.11.2008 வரை) - சோதிடர் கிருஷ்ணா.*

**மகரம்**

உத்திராடம் 2,3,4, திருவோணம் 1-4, அவிட்டம் 1,2

ராசிக்கு 12 இல் குருபகவானும் 8 இல் சனியும் இருக்கிறார்கள். குரு பார்வை சனிபகவான் மேல் படுவதால் தீமைகள் குறையும். 4,6,8இல் குருபார்வை விழுவது நல்லது. வீட்டுப் பிரச்சினைகள் தீரும். எதிரிகள் குறைவர். கடன்கள் குறையும். சில வழக்குகள் நன்மையில் முடியும். குடும்பத்தினரோடு சுமுகமாக பேசுவது நல்லது. மக்களின் படிப்பு சிறிது தேக்க நிலையில் இருக்கும். அவர்களின் செலவு கூடும். சிலருக்கு வீடு வாகனம் வாங்க வாய்ப்புக் கிடைக்கும். மைத்துனர்களோடு மோதாமல் இருப்பது நல்லது. அவர்கள் உதவ மாட்டார்கள். கணவன், மனைவி உறவு பதற்றம் நிறைந்ததாக இருக்கும். சிவனே என்றிருப்பது நன்மை தரும். பெரியோர்களிடம் அன்பாகப் பேசுவது நல்லது. முடவர்களுக்கு உதவுவது, சனி பகவானுக்கு நல்லெண்ணை விளக்கேற்றுவது, குருபகவானுக்கு மல்லிகைமலர் சாற்றுவது நன்மை தரும். சிலருக்கு மேல்நாட்டு பிரயாணங்கள் வேலை வாய்ப்பு கிடைக்கும். அரச அலுவல்களில் நிதானம் தேவை. 12 இல் இருக்கும் குருபகவான் சுபச் செலவுகளை அதிகம் தருவார். அதனால் கவனம் தேவை. கடன்பட்டால் கடன் சுமை சீக்கிரம் தீராது. பழைய கடன்கள் தலை தூக்கும். அவைகளை தீர்த்த பிறகு புது கடன்கள் வாங்கவும். இல்லையெனில் வழக்குகளில் சிக்க நேரிடும். நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம். அவர்கள் உதவும் நிலையில் இருக்க மாட்டார்கள். அதிஷ்ட திகதிகள் 4,8,13,17,26

**பெண்களுக்கு:-** இந்தக் குருப் பெயர்ச்சி விசேஷமாக இல்லை. 12ஆம் இடமென்னும் விரைய ஸ்தானத்து வருகின்றபடியால் குரு பகவான் அங்கிருந்து உங்கள் ராசிக்கு 2ஆம், 8ஆம், 6ஆம், போன்ற இடங்களை பார்வை செய்வதால் உடம்பில் அடிக்கடி தொல்லைகள் தோன்றலாம் மனக்குழப்பமும், சிக்கல்களும், பிரச்சினைகளும் உங்களை தேடி வரும் மனதில் ஏதாவது நினைத்து கவலைப் பட்டுக் கொண்டே இருப்பீர்கள். சில பெண்களுக்கு வாதக் கோளாறுகள் காணப்படும். பிள்ளைகளாலும் மனக்கஷ்டம் வந்து கொண்டே இருக்கும். விநாயகப் பெருமானையும், சனி, குரு போன்ற கிரகங்களை வழிபடுவது நன்று. உறவினர்கள் கூட பிரச்சினையைத் தருவார்கள். சுபகாரியங்கள் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கும். அதற்குரிய பரிகாரங்கள் செய்ய வேண்டும். 10.05.2008 முதல் 07.09.2008 வரை குரு பகவான் வக்கிர சஞ்சாரத்தில் இருப்பதால் மாறுதல்கள் வரும். உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படும். பிரச்சினைகளிலிருந்த நிவர்த்தி கிடைக்கும். இந்த சமயத்தில் மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும் இருப்பீர்கள். எதிர்பார்க்கும் இடங்களிலிருந்து நல்ல தகவல்கள் வரும். பின்பு 3 மாத காலமும் தெய்வ வழிபாடும் பொறுமையாகவும், நிதானமாகவும் இருந்து காரியங்களைக் கொண்டு போகலாம்.

**மாணவர்களுக்கு:-** இந்த குரு பெயர்ச்சி சிறு சிறு வேதனைகளை தருவார். எச்சரிக்கையோடு இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம். பாடங்களை விழுந்து விழுந்து படித்தாலும் கொஞ்ச நேரம் கழித்தால் ஒன்றுமே மனதில் நிற்காது. எனவே கலைமகளையும், விநாயகப் பெருமானையும், தட்செணாமூர்த்தியையும் வழிபடுவது சிறப்பாகும். மனதை எங்கும் சிதற விடாமல் கவனத்துடன் படிப்பது நன்று. மேலும் நண்பர்கள் கூட உங்களுக்கு வில்லங்கங்களாக மாறும் சந்தர்ப்பம் வரலாம். எனவே பொறுமையோடும், கடவுள் வழிபாடு மூலமும் வெற்றி காணலாம்.

**அரசாங்க வேலை செய்வோருக்கு:-** இந்த குரு பெயர்ச்சி விசேஷமாக இல்லை. என்றாலும் தட்டி முட்டியும் செல்லும். அட்டம சனியன் அல்லல்கள் ஒரு பக்கம் இருந்து கொண்டே இருக்கும். சனிக்கிழமை தோறும் விரதம் இருந்து சனி பூஜை செய்வது நல்லது. எதிர்பார்க்கும் உயர்வுகள் தடைபட்டுக் கொண்டே இருக்கும். அடிக்கடி மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக வேண்டிய சூழ் நிலைவரும். சில நேரங்களில் அதிக தூரங்களில் இடமாற்றம் வரலாம். ஒரு சிலருக்கு பெண்களால் கூட பிரச்சினைகள் வரலாம். பணப்பிரச்சினைகளும் இருந்து கொண்டே இருக்கும். தேவையில்லாத பிரச்சினைகளில் தலையிட்டால் பொலிஸ் கேஸ், கோர்ட் என்று அலைய வேண்டி இருக்கும். நிதானமாக இருப்பது நன்று. 10.05.2008 முதல் 07.09.2008 வரை சிறு மாறுதல்கள் ஏற்படும். வியாழக்கிழமைகளில் விஷ்ணுவையும், குருவையும் வழிபடுவது நன்று.

**சொந்த தொழில் செய்பவர்களுக்கு:-** இந்த குரு பெயர்ச்சி அதாவது 12ஆம் இடத்து குருவால் விசேஷமில்லையென்றாலும் தெய்வவழிபாடு மூலம் நிம்மதி காணலாம். பண நஷ்டம் வருவதற்கான சந்தர்ப்பங்களே அதிகமாக இருக்கும். தொழிலும் மந்தமாகவே இருக்கும். நீங்கள் எடுக்கும் முயற்சிகளிலும் கூட தடைகளே காணப்படும். (தடை விலக விநாயகப் பெருமானுக்கு மாதத்தில் ஒரு முறை தேங்காய் உடைக்கவும்), புதிய தொழில்களில் இறங்காமல் இருப்பது நன்று. மழை பெய்யும் போது குடையில் ஒதுங்குவது போல், சொந்த தொழிலில் இறங்காமல் சம்பளத்திற்கு நிற்பது உத்தமம். உறவினர்கள் கூட உங்களுக்குப் போட்டியாக வரலாம். 10.05.2008 முதல் 07.09.2008 வரை ஒரு சிறிய ஆறுதல் கிடைக்கும். அப்போது உங்களுடைய முயற்சிகளில் வெற்றி வாய்ப்புகள் வந்து சேரும். எந்த காரியத்தில் இறங்கினாலும் தெய்வ வழிபாடோடு செல்லவும்.

# இம்முறை பிரபாவின் மாவீரர் தின உரை: அரசு மிகக் கவனமாக இருக்க வேண்டும்

## நேரத்துடன் எச்சரிக்கின்றார் ஐ.தே.கட்சியின் எம்.பி.

கொழும்பு,நவ.17

''இம்மாதம் 26ஆம் திகதி புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுக்கப்போகும் மாவீரர் தினச் செய்தி குறித்து அரசு மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.''

- இவ்வாறு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் ரணவக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் எச்சரிக்கை விடுத்தார்.

பிரபாகரன் தனது உரையில் தமிழீழப் பிரகடனம் பற்றி அறிவிப்பார் என்றும் அதை சர்வதேச சமூகம் ஏற்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ரணவக்க, இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு-

புலிகள் தொடர்ந்தும் தமிழீழத்தை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கான பாரிய தாக்குதல்களில் அவர்கள் ஈடுபடலாம்.

தமிழ்ச்செல்வனின் மரணத்தைத் தொடர்ந்து தமிழீழத்தை உடனடியாக நிறுவவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இங்கு கூறுகின்றனர். இங்கு உரைநிகழ்த்திய மாவை சேனாதிராஜாவும் அதையே வலியுறுத்தினார்.

நவம்பர் 26ஆம் திகதி பிரபாகரன் மாவீரர் தின உரையை நிகழ்த்தவுள்ளார். அந்த உரையில் தமிழீழத்தை அமைப்பது குறித்து அவர் கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து, புலிகள் அதற்கான ஏற்பாட்டில் ஈடுபடலாம். ஆகவே, அரசு கவனயீனமாக இருந்து விடக்கூடாது. மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

எனது இந்தக் கூற்றை அரசு சர்வ சாதரணமாக எடுத்துவிடக்கூடாது. மிகவும் பொறுப்புடன் இருந்தால்தான் புலிகளின் அந்தத் திட்டத்தை முறியடிக்க முடியும். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார வாழ்த்துகின்றே[...]


## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

●●தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 இல் 122 மாணவர்களைச் சித்தியடையச் செய்து 51.69 சதவீதச் சித்தி மூலம் யாழ். மாவட்டத்திலும் வடக்குக் கிழக்கு மாகாணத்திலும் அகில இலங்கையிலும் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக இருப்பதற்குக் கடின உழைப்பால் உயர்வுகள் பெறவைத்த அதிபர், உப அதிபர், பகுதித் தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மனம் நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்

இன்று 17.11.2007 சனிக்கிழமை நடை[...]
தங்கப்பதக்கங்களை[...]



சி.பராபரன் 186 — அகில இலங்கை - 4, மாவட்ட நிலை - 2
பி.ஹாரணி 184 — அ.இ.நி - 8, மா.நி - 4
சு.சங்கவி 183 — அ.இ.நி - 12, மா.நி - 5
க.கஜானியா 179
த.டிலோஷா 176
த.சங்கவி 173
ம.திரிஷிகா 173
ர.அபிர[...] 172



இ.செந்தூரன் 169
இ.ஆதீஷன் 169
க.கோபிகாந்த் 169
வி.பிரணவன் 169
சி.சரண்யன் 169
தெ.ஆதவன் 168
சா.ஜிதுர்சனன் 168
சி.துவாரகன்[...]

### பரிசில்களையும் பதக்கங்களையும் பெற்றுக்கொள்ளும் மாணவர்[...]



மு.துவாரகா 166
ஆ.சாருஜன் 165
து.கோகுலன் 165
வி.தேவசேனா 165
நா.டினோஜா 165
ப.நிக்ஷன் 164
ர.சஞ்சயன் 164
சி.சுருதி 164
பா.கஜந்தன் 163
சி.சிந்துஜன் 163
ஜெ.ஜெனீபா 163
வெ.பாலயாப[...] 161



சோ.டனேக்கா 161
செ.கிரிசாளினி 161
ப.மதுஷா 161
ஏ.திஷாந்தினி 160
ந.ரஜீவன் 160
ஜெ.ஜெயலக்ஷன் 160
யோ.நிதசர்சன் 160
சி.குகதர்சன் 160
ச.திசாந்தன் 159
ம.நிதர்சன் 159
உ.ஹோரிஷா 159
தி.கி[...] 15[...]



ர.வித்தியசங்கவி 158
லோ.டசிந்தா 157
ஆ.ஸோபிகா 157
தே.வரப்பிரகாஸ் 157
க.சரணிகா 156
அ.சுபஸ்திகா 156
ச.ஐஸ்வர்யா 156
பா.ஜோதினி 156
இ.ஜோய்நிஷான் 156
ஆ.கஜானன் 156
ம.மயூரன் 156
கு.அர்ச[...] 156




பா.கஜந்தினி 154
ஆ.அங்கவை 154
இ.துவாரகா 154
வி.டய்சிகா 154
சி.கஜன் 154
பா.ஜனவத்ஸசர்மா 153
ப.தர்சணன் 153
ர.ஸகிஷ்னா 153
தி.தர்சிகன் 153
ச.ஹரிசங்கர் 153
நி.கம்சிதா 153
ச.யதுசோ[...] 152



உ.ஜிதுஷன் 152
தெ.நிலக்ஷன் 152
சி.மாதுஷன் 152
நே.கிருத்திகா 152
தே.ஜதீஸன் 152
ஜெ.சங்கீதன் 151
ஜெ.லக்ஷாயினி 151
ஜெ.குகப்பிரஷாதன 151
த.ஹேதுகா 151
க.கீர்த்தனா 151
வி.ஜாஷ்வகா 151
கி.பிருந்தா 150



ர.யதுஷா 149
கு.யசிந்தினி 149
ம.கஜிந்தன் 149
க.துர்ஷிகன் 147
த.ஆதவன் 147
கு.திலக்ஷி 146
ர.மகின்ஷா 146
ச.திலக்ஷன் 146
ம.ராகுல் 145
த.தனுஷியன் 145
ம.சுபாஸ்கர் 145
வி.யதுசன் 145



சி.டனார்த்தனன் 143
சி.டினார்த்தனன் 143
ப.ரதீஷன் 143
ச.மதிவதனி 142
கே.சுபஹரி 142
த.லவகுசன் 141



வ.டிவாகரன் 141
ஈ.பவித்திரா 140
செ.மயூரிக்கா 140
தே.ரோஜானந்தன் 140
கு.அருள்குமரன் 140
கோ.பிரவீன் 140

இவர்கள் அனைவரும் சகல கலைகளும் பெற்றுக் கல்வியில் சிறப்ப[...]
வரை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாட விதான செயற்பாடு[...]
கருத்தூன்ற வைத்து உன்னத நிலைக்கு வித்திட்ட பாடசாலை அ[...]
கௌரவிப்புக்களையும் பாராட்டுக்களையும் வழங்கி, இன்று பெருவிழ[...]
பேருவகையும் அடைகின்றோம். கடந்த பல வருடங்களாகத் தொ[...]
வருங்காலத்திலும் பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்[...]
அதிபர், ஆசிரியர்கள் நலமும் வளமும் பெருக வாழ்வாங்கு வாழவும்[...]

**இந்துவின் ஆரம்பம் இல[...]**

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.** சித்திய[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர்ரோஸ்...
# ...சாலையின்...

...க்கிழமை நடைபெறும் 2007 இற்கான பரிசளிப்பு விழாவில்
...க்கங்களைப் பெறும் மாணவர்கள்



ர.அபிராமி 172 | இ.உதயபவன் 170 | பா.செந்துஜன் 170



...8 | சி.துவாரகன் 168 | பு.சர்மிலன் 168 | சி.நேருகரன் 167

...ணவர்கள்



...னீபா ...3 | வெ.பாலயாசோதினி 161 | பா.செந்தூர்ச்செல்வன் 161 | நி.பிரசாந்தி 161 | கு.நிருஜன் 161



...ரீஷா ...9 | தீ.கிரிஜா 159 | சி.தர்மீகன் 158 | அ.மதுசாந் 158 | ஜெஆர்த்தன் 158



...ரன் ...6 | கு.அர்ச்சனா 156 | ஜெ.நிருபன் 155 | நி.துவாகரன் 155 | சி.ஜெயசக்தி 155



...சிதா ...3 | ச.யதுசோபனா 152 | கே.கஜலக்ஷி 152 | சி.அபிஷானா 152 | த.இந்துஜன் 152



...கா | கி.பிருந்தா 150 | ச.கிருஷாந் 150 | க.கரேகா 150 | பா.தாருசன் 150



...ர் | வி.யதுசன் 145 | ந.சஞ்சிதா 145 | வ.பாஷ்வசன் 144 | க.ரிஷிவர்மன் 144

...பியில் சிறப்புற வாழ்த்துவதோடு தரம் 1 தொடக்கம் தரம் 5 ... செயற்பாடுகளிலும் மிக நுணுக்கமாகச் செயற்திறனுடன் ...டசாலை ஆசிரியப் பெருந்தகைகளுக்கு நன்றி கலந்த ...று பெருவிழா எடுத்துச் சிறப்பிப்பதையிட்டு பெருமையும் ...ளாகத் தொடர்ந்து முன்னிலை பெற்ற எமது பாடசாலை ...ளப் படைத்து வெற்றிவாகைகள் சூடவும் அதிபர், பிரதி ...கு வாழவும் வாழ்த்துகின்றோம்.

## ...ம் இனிய ஆரம்பம்

புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்

---

## 1 முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

# சுபாஸ்கரன் ப்ரீத்திகா



**17.11.2007**

சுபாஸ்கரன் குமுதா தம்பதிகளின்
செல்வப் புதல்வி ப்ரீத்திகா

தனது முதலாவது பிறந்தநாளை 17.11.2007 இன்று ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். ப்ரீத்திகாவை அன்பு அப்பா, அம்மா, பிரான்சில் வசிக்கும் சுதா பெரியப்பா குடும்பத்தினர், இலங்கையில் வசிக்கும் அப்பப்பா குடும்பத்தினர், அம்மப்பா குடும்பத்தினர், வவா அத்தை, அகிலன் மாமா, மச்சான்மார்களான துஷ்யந்தன், வேணுஷன் மற்றும் மதி அத்தை, சுதா மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் செல்வச்சந்நிதி முருகன் அருள் பெற்று சகலகலைகளும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ஐயனார் கோயிலடி,
கொடிகாமம்.

தகவல்
ந.நவரத்தினம் (அப்பப்பா).

(67922)

---

## சாவகச்சேரி பிரதேசசபை

### 01.01.2008 முதல் 31.12.2008

### சந்தை/இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 28.11.2007 (பி.ப 1 மணி வரை)
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 29.11.2007 (ந.ப 12 மணி வரை)
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 30.11.2007 (மு.ப 10.30 மணிக்கு

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | கேள்விப் பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 1. | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை (நாள் ஒன்றுக்கு) | 1,000.00 | 3,000.00 | 200.00 |
| 2. | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (நாள் ஒன்றுக்கு) | 500.00 | 1,500.00 | 200.00 |
| 3. | கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல 1 (மாதம் ஒன்றுக்கு) | 400.00 | 500.00 | 200.00 |
| 4. | கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல 2 (மாதம் ஒன்றுக்கு) | 400.00 | 500.00 | 200.00 |
| 5. | வரணி சந்தைக் குத்தகை | 85,000.00 | 1,500.00 | 200.00 |
| 6. | வரணி சந்தை மாட்டிறைச்சிக் கடை | 10,000.00 | 500.00 | 200.00 |
| 7. | வரணி இயற்றாலைச் சந்தை | 1,000.00 | 500.00 | 200.00 |
| 8. | கைதடி சந்தை மாட்டிறைச்சிக் கடை | 80,000.00 | 1,000.00 | 200.00 |
| 9. | கைதடி சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 30,000.00 | 500.00 | 200.00 |
| 10. | கைதடி சந்தை குத்தகை | 38,000.00 | 500.00 | 200.00 |

குறிப்பு:

1. இறைச்சிக்கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
2. கேள்விப் பத்திரக் கட்டணம் கேள்வித் தொகை மாத வாடகை என்பவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (15%) மேலதிகமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டைகளைக் கொண்டு வரவேண்டும்.
4. கேள்வித் தொகைக்கு மேலதிகமாக வற்வரி 15% செலுத்த வேண்டும்.
5. சந்தைவளவில் உள்ள கடைகளுக்கு எந்த வரி அறவீடுகளும் மேற்கொள்ளக்கூடாது.
6. கால்நடைகள் கைதடிக் கொல்களத்தில் வெட்டப்பட்டு சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் இறைச்சிக்குக் கொண்டுவருதல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
8. போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

கு.ந.பாலச்சந்திரன்
செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
10.11.2007.

(சி-54378)

---

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

## COMPUTER EXPRESS

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

Branch office
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

### Diploma in Hardware Engineering

❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.,

Course Fee :2000/=

### Diploma in Computerized Accounting

ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.

Course Fee :3500/=

### Diploma in Video Mixing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.

Course Fee :3000/=

### Diploma in Graphic Designing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX

Course Fee :2000/=

... 19/11/2007 09.00 AM

---

## JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA

(inaugurated - 1947)

## AMERICAN CEYLON MISSION

(founded in 1816)

## UDUVIL GIRLS' COLLEGE
## A SERVICE OF PRAISE & THANKSGIVING

The Jaffna Diocese of the Church of South India (JDCSI) cordially invites all Past Students and Staff of Uduvil Girls' College (UGC) and Well-wishers to a Service of Praise & Thanksgiving to God for Uduvil Girls' College, one of its Educational Institutions, on Sunday, November 18,2007 at 7.30 a.m. at the JDCSI Colombo Church, 17 Frances Road, Wellawatte, Colombo 6 and to a time of fellowship thereafter.

The Rt. Rev. Dr Daniel S. Thiagarajah, Bishop of the Church of South India in the Jaffna Diocese and President/Chairman, American Ceylon Mission will preach at this service.

Rev.I.Rajkumar
Secretary, JDCSI

(C/54360)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6ஆம் ஆண்டு நினைவு

அமரர்
**முத்தையா சதானந்தம்**
(ஆசிரியர்)



அன்னை மடியில்
20 ✱ 08 ✱ 1923

பரந்தாமன் அடியில்
23 ✱ 11 ✱ 2001


திதி: 17.11.2007

எங்கள் இதய ஜோதியே!
ஆண்டுகள் எத்தனை மறைந்தாலும்
உங்கள் திவ்ய ஒளி இங்கே
பிரகாசித்துக்கொண்டுதான் இருக்கும்
ஆறாத்துயருடன்தான் காலங்கள் ஓடுகின்றன.

உங்கள் நினைவில் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கற்கோவளம்,
பருத்தித்துறை. (சி/54354)

# ஈரவிழிகளுடன் முதலாமாண்டு நினைவஞ்சலி



அமரர்
**தேவராசா மனோராஜ்**
(மோகன்)
*(பிரபல வாகன வர்த்தகத் தரகர்)*

அன்னை மடியில்
07 ✱ 03 ✱ 1976

ஆண்டவன் அடியில்
17 ✱ 11 ✱ 2006


உன் பிரிவின் தாளாத சோகத்தால்
ஓராண்டு முடிவதற்குள் உன் அன்னையும்
ஓடிவந்து விட்டார் உன்னிடமே
பெரும் சோகம் மாறாது தவிக்கின்றோம்
உன் பூமுகம் காணாது வாடுகின்றோம்
நாம் வாழும் வரை உன் நினைவு மாறாது
உன் இறப்பின் நெஞ்சுக்குமுறல் மாறக்கூடியதா?
மறக்குமோ நெஞ்சம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: **விமலா இரவீந்திரன்**
*(கிளிச் சித்தி),*
*பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.*

உம் பேரிழப்பால் நிதம் தவிக்கும்:
**குடும்பத்தினர்.**

(67960)

# 31ஆம் நாள் நினைவுகளுடன்...



மண் மகிழ
04 . 02 . 1932

மனம் நெகிழ
18 . 11 . 2007

அமரர்
**சோமசுந்தரம் கந்தையா**

அன்பின் இருப்பிடமாய் அவனியில் இருந்து
அன்போடு எமைக் காத்த - தெய்வமே
அகிலத்தை விட்டு அகன்றே சென்றாலும்
அழியாது உன் நினைவு எமைவிட்டு.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (17.11.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

268/5, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி. (67959) **குடும்பத்தினர்.**

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.17

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் பாடசாலைகளின் 13 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டியில் இறுதிச் சுற்றில் இன்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

✱ சென்.ஜேம்ஸ் ம.வி. எதிர் தேவரையாளி இந்து (காலை 9 மணி).

✱ நெல்லியடி ம.ம.வி. எதிர் மானிப்பாய் இந்து (காலை 9 மணி)

✱ அருணோதயாக் கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி (முற்பகல் 10 மணி).

✱ நாவாந்துறை றோ.க. எதிர் மகாஜனாக் கல்லூரி (முற்பகல் 10 மணி)

✱ அராலி சரஸ்வதி வித்தி எதிர் சென். ஜேம்ஸ் அணிக்கும் தேவரையாளி இந்து அணிக்கும் இடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணி (பிற்பகல் ஒரு மணி).

✱ யாழ்.மத்திய கல்லூரி எதிர் நெல்லியடி ம.ம.வி அணிக்கும் மானிப்பாய் இந்து அணிக்கும் இடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணி (பிற்பகல் ஒரு மணி). (50)

## பட்டச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் கடந்த 2005ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்கப் பின்னர் தமது கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்து கொண்ட மாணவர்கள், தங்களது பட்டச் சான்றிதழ்களை எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி க.கந்தசாமி தெரிவித்துள்ளார். (203)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,நவ.17

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களை உதவி ஆசிரியர் சேவையில்இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்றுமுன்தினம் வலயக் கல்வி அலுவலகத்தில் இடம் பெற்றது.

மாகாண கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களால்நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 55 தொண்டர் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். (203-207)

## வலி.தென்மேற்கில் நுளம்புப் பெருக்கம்

வலி.தென்மேற்கு, நவ.17


வலி. தென்மேற்கு பிரதேசத்தில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது பெய்துவரும் மழையை அடுத்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் இரவு நேரங்களில் சிறுவர்முதல் பெரியோர் வரை அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நுளம்புத்திரிகளின் விலையும் வழமையைவிட அதிகரித்துள்ளதால் மக்கள் நோய் ஆபத்துக்களை எதிர்நோக்குகின்றனர். (203-135)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
20 ✱ 05 ✱ 1927

ஆண்டவன் திருவடியில்
28 ✱ 11 ✱ 2006

அமரர் **சுப்பையா தம்பித்துரை**
*(ஸ்தாபகர், உரிமையாளர், நொதேன் மோட்டோர்ஸ் வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)*

திதி: ஸப்தமி 17.11.2007

*வாழ்க்கையின் தத்துவத்தை வளமுறக் கூறி*
*வாழும் வழிகளை வண்ணமுற அமைத்துத் தந்து*
*காலம் முழுவதும் நாங்கள் கண்ணியமாக வாழ*
*சாலவும் மக்களுக்கு சரித்திரம் படைத்த ஐயாவே!*
*ஓராண்டு சென்றாலும் ஓயவில்லை எம் வேதனை*
*நூறாண்டு சென்றாலும் மாறாதையா எம் கவலை*
*ஐயாவைப் போல ஆலோசனை கூற யாருமற்று*
*ஐயோ! ஐயா என அடிக்கடி அலறுகின்றோம்!*
*ஆண்டவன் திருவடியில் இருந்து நீங்கள் ஆறுதல் தரவும்*
*உங்கள் ஆத்மா சாந்திபெறவும் ஆண்டவனை*
*வேண்டுகின்றோம்.*

*மிஷன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (சி/54353)

**குடும்பத்தினர்**
**திருமதி ச.தம்பித்துரை,**
**த.கோகிலநாதன் (மகன்).**

# இதயம் மறவா
# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசரத்தினம் பாக்கியம்**

மலர்வு
07 ✱ 08 ✱ 1932

உதிர்வு
08 ✱ 12 ✱ 2005

திதி: பூர்வபட்ச அட்டமி
17.11.2007
சனிக்கிழமை

அன்பின் பிறப்பிடமாய்
ஆசையின் உறைவிடமாய்
எமை ஈன்ற அன்னையே!
ஏணியாய் நின்று எமை உயர்த்தினாய்!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*நிரந்தர முகவரி:*
'மலர் வாசம்'
மகாஜனக் கல்லூரி வீதி,
தெல்லிப்பழை.


*தற்காலிக முகவரி:*
இல.43ஏ, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(67932)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17 ✱ 03 ✱ 1932



உதிர்வு
19 ✱ 11 ✱ 2004

அமரர் **வல்லிபுரம் கிருஷ்ணசாமி**
*(உரிமையாளர், விநாயகர் மோட்டார் வேக்ஸ் மீனாட்சி அம்மன் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரி)*

திதி: பூர்வபட்ச அட்டமி 17.11.2007 சனிக்கிழமை

மூவாண்டு சென்றாலும் எம் மூச்சைவிட் டிறங்காதபேரன்பே
காராண்ட களனியென காலமெலாம் செழிப்புற்றோம்
நீராண்ட நிலத்தடியில் சுவடுகளும் கதைசொல்லும்
பேர்கொண்ட பேராளா உன் சாந்திக்கு வேண்டுகின்றோம்.

*தற்காலிக முகவரி:*
*''கோகுலம்''*
*காளிகோயிலடி,*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (67924)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிராஜ் கொலை விசாரணைகளில் அரசு பொய் நாடகமே ஆடுகின்றது

## ஓராண்டு நிகழ்வில் கடும் விசனம்

கொழும்பு,நவ.17

"படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தொடர்பிலான ஆக்கபூர்வமான விசாரணைகள் எதனையும் கடந்த ஒருவருடகாலமாக அரசு சிரத்தையுடன் மேற்கொள்ளவில்லை. மாறாக விசாரணை என்ற பேரில் அரசு பொய் நாடகத்தையே ஆடிவருகின்றது."

- இவ்வாறு நடராஜா ரவிராஜின் ஓராண்டு நினைவுக் கூட்டத்தில் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரவிராஜின் ஓராண்டு நினைவு வைபவம் வியாழக்கிழமை கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் திருவுருவப் படத்துக்கு பல அரசியல் கட்சிப் பிரமுகர்கள் மலர் மாலைசூடி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியவை வருமாறு:-

எமது கட்சியின் உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் (அதாவது வியாழக்கிழமை யுடன்) ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது. ஆனால், அவரின் கொலை தொடர்பில் இதுவரை முழுமையான விசாரணைகள் எவையும் இடம்பெறவில்லை. விசாரணை என்ற போர்வையில் ஸ்கொட்லாந்து நாட்டின் நிபுணர்குழு ஒன்று அரசால் வரவழைக்கப்பட்டு, பொய்நாடகம் மேடையேற்றப்பட்டது. ரவிராஜை யார் கொலை புரிந்தார்கள்? அரசுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுக் குழுக்களா அல்லது வேறுயாராவதா?

இந்த கொலை குறித்த உண்மையை மறைப்பதற்கு அரசுக்கு ஒரு தேவை இருக்கிறது. நாட்டில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருகின்றன. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாட்டின் இனப்பிரச்சினையை யுத்தத்தின்மூலம் தீர்க்க முடியாது. சமாதானப் பேச்சின் மூலம்தான் தீர்க்க முடியும். நாட்டில் இவ்வாறான அட்டூழியங்கள் இடம்பெறுமேயானால் ஒருபோதும் சிறந்த ஆட்சி நடைபெறாது.

### மனித உரிமை மீறல்கள் தொடர்கதையாகின்றன

தொடர்கதையாக இடம்பெற்றுவரும் இந்த மனித உரிமை மீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இந்தச் செயற்பாட்டிற்கான முறையான பாடத்தை அரசு கற்றுக்கொள்ள வேண்டும்.

மறைந்த ரவிராஜ் பெரும்பான்மை மக்களுக்கு இருக்க வேண்டிய உரிமைகள் சிறுபான்மையினருக்கும் இருக்க வேண்டும் என வாதிட்டவர். அவர் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்காகவும் குரல்கொடுத்தவர். அத்துடன், அவர்களை சமத்துவமாகவும் நேசித்தவர்.

மேலும் இந்த நாட்டில் தொடரும் அழிவுகளை நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தமது கடமையைச் சரிவரச்செய்ய வேண்டும் - என்றார்.

அங்கு உரையாற்றிய மேலக மக்கள் முன்னணித் தலைவரும், மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் தெரிவித்தவை வருமாறு:-

"இன்றைய நிகழ்வு (அதாவது வியாழக்கிழமை), துக்கம் நிறைந்ததாகவும், ஒருவகையில் ஆவேசம் மிக்கதாகவும் காணப்படுகின்றது. ஏனெனில், நண்பர் ரவிராஜ் எதற்காக கொலைசெய்யப்பட்டார் என்பதை அரசு இதுவரை கண்டறியவில்லை. ரவிராஜ் நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கு குரல் கொடுத்த போராளி. இவரின் கொலையைக் கண்டிக்காது அரசு பொய்நாடகம் ஆடுகின்றது.

### அனைத்துக் கட்சி என்பது வெறும் நாடகம்

மேலும், அரசு அனைத்துக் கட்சி மாநாடு என்ற நாடகத்தை ஆடிவருகின்றது. அத்துடன், சர்வதேச சமூகத்தை ஏமாற்றி நாட்டில் தொடர்ச்சியாகப் போர்ச் சூழ்நிலையை ஏற்படுத்தி வருகின்றது - என்றார்.

பிரதி அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினருமானபாயிஸ்கூறியவை வருமாறு:-

நண்பர் ரவிராஜின் படுகொலையை ஒரு வருடமாகியும் கண்டுபிடிக்க முடியாததைக் கண்டிக்கவேண்டும்.

எமது மு.காவின் கொள்கை, பேச்சின் மூலமே சமாதானத்தை ஏற்படுத்துவது என்பதே. அத்துடன், நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவுகளைப் பார்க்கும் போது யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார்.

போருக்கு எதிரான முன்னணியின் தலைவர் குமார் ரூபசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கரணாரட்ன, ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் தாயசிறி ஜெயசேகர ஆகியோரும் உரையாற்றியிருந்தனர். அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், சிவநேசன், கிஷோர், சிறிகாந்தா, கனகசபை ஆகியோர் உட்பட பல அரசியல் கட்சிப் பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

(க -03)

# இனத்தின் விடுதலைக்காகப் போராடுவோர் ஏனைய சமுகத்தவரைத் துன்புறுத்தக்கூடாது

## சபையில் அமைச்சர் ரிஷாத் கோரிக்கை

"சிறுபான்மை இனத்தவர்களின் விடுதலைக்காகப் போராடுகிறோம் எனக் கூறுபவர்கள் அங்கு வாழும் மற்றுமொரு சிறுபான்மையினரைத் துன்புறுத் தக் கூடாது."

- இவ்வாறு மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்ட உரை மீதான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு-

அண்மையில் வவுனியா வீரபுரம் பகுதியில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ்விடயம் புலிகளின் தலைமைக்குத் தெரியாமல் இருக்கலாம். எனினும், இதுவே கடைசி நிகழ்வாக இருக்க வேண்டும்.

வீரபுரம் பகுதியில் தனது நண்பர் ஒருவரைச் சந்திக்கச்சென்ற இடத்திலேயே இந்த முஸ்லிம் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தன்னைச்சுடப்போகிறார்கள் சாகப் போகிறேன் என்பதை அறிந்த அந்த நபர், அதற்குமுன் கடைசியாக கடவுளைத் தொழுவதற்கு இரண்டு நிமிடங்கள் தாருங்கள் என கெஞ்சிக் கேட்டுள்ளார். கடைசிநேரத்தில் அவரது ஆசையைக்கூட அனுமதிக்காமல் சுட்டும் கொன்றுள்ளனர். புலிகளிடமிருந்து தப்பி வந்த நபரின் மூலம் இந்த உண்மை அறியமுடிந்தது.

நாங்கள் தமிழ் மக்களுடன் சகோதரத்துவத்துடன் வாழவே விரும்புகிறோம். நாம் எவரையும் எதிரிகளாகப் பார்க்கவில்லை. வடபகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்களை மீண்டும் அவர்கள் வாழ்ந்த இடங்களில் மீளக்குடியேற ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். (சி)

# ஒருகணம் தலைகுனிந்து மறுகணம் தலைநிமிர்வோம்



விடுதலைப்புலிகளின் அரசியல் துறைச் செயலாளரின் மறைவு, தமிழினத்துக்கு பேரிழப்பு என்பதில் மாறுபட்ட கருத்து நிலை கிடையாது.

பல சமர்க்களம் கண்ட போராளியாகவும், சர்வதேச அரசியல் தளத்தில் தமிழர் தேசியத்தின் குரலாகவும் ஒலித்த பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் பங்காற்றல் ஈழ வரலாற்றில் ஆழமாகப் பதியப்பட்டுள்ளது.

மக்களின் விடுதலைக்காய் மரணத்தையும் வரவேற்கத் தயாராக இருக்கிறேனென அவர் கூறிய மானுட நேசிப்பு வார்த்தைகள், தாயகக் காற்றோடு இரண்டறக் கலந்து விட்டன.

விதைக்கப்பட்ட ஆயிரமாயிரம் மாவீரர்களின் விடுதலை உணர்வுகளும், இலட்சிய வேட்கையும், போராட்டத்தையும் வழி நடத்தும் உந்துவிசையினை இயக்கிக்கொண்டிருக்கின்றது.

தமிழ் தேசியத்தின் அரசியல் தீக்குள், விரலை வைத்து விட்டான் எதிரிசுடுமெனத் தெரிந்தும், தீயணைக்க முனை கிறான்.

கொழுந்து விட்டெரியும் மாபெரும் விடுதலை வேள்வித் தீ இதுவென்று அவனுக்கு இன்னமும் புரியவில்லை.

எதிரியின் கரங்களைப் பலப்படுத்தும் சர்வதேச கயவர்களுக்கு, கருகப் போகும் இவன் கரங்கள் பற்றிய அக்கறையு மில்லை.

சர்வதேச சமாதானக் கதையாடல்களுக்கு முடிவுரை எழுதிவிட்டார் மஹிந்தர்.

புதிய கதை எழுத, வேற்றுக் கிரகத்திலிருந்தே மனிதர்கள் வர வேண்டும்.

தமிழ்ச்செல்வனின் மறைவிற்கு புதிய அனுசரணையாளர் ஹான்சன் பௌவர் விடுத்த செய்தியே, பிரிகேடியரின் இழப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சியை விட அதிக கனமாகவிருந்தது.

அதாவது, பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் விட்டுச் சென்ற சமாதான அரசியல் பணியைத் தொடருவதே அவருக்கும் செய்யும் நற்பணி என்கிறார்.

மூடப்பட்டது சமாதானக் கதவென்பதை பௌவர் இன்னமும் புரியாமலிருக்கிறார். புதிய அரசியல் துறைக்குச் செயலர் ப.நடேசனைக் கொண்டு மறுபடியும் கதவைத் தட்டச் சொல்கிறார்.

யுத்தமே இறுதி முடிவென சிங்களத் தரப்பு ஒரே குரலில் ஆர்ப்பரிக்கும் போது, கதவைத் தட்டி காலத்தை நீடிக்க சர்வதேசம் முயன்றாலும் அவலத்தின் விளிம்பில் நிற்கும் தாயக மக்கள், மூர்க்கமான எதிரியை எதிர்கொள்வதையே முதற்பணியாகக் கொள்வார்கள் போலுள்ளது.

- 'எள் விழுந்தால் அடுத்த கணமே எண்ணெயாகும்' சனத்திரள் அலை, தமிழ்ச்செல்வனின் இறுதி ஊர்வலத்தில் இணைந்து கொண்டது, மக்களின் தன்னியல்பான எழுச்சியினை உலகறியச் செய்கிறது.

மிகையொலி போர் விமானங்கள் வானில் அச்சமூட்டும் வகையில் பறந்து திரிந்தாலும், மக்கள் கூட்டம் அசரவில்லை.

வெகுஜனப் போராட்டம் பற்றி தர்க்கிப் போர் பார்வையிட வேண்டிய அருங்காட்சி அது. புலனாய்வுத்துறை செயலர் பொட்டம்மான், பலகளங்கண்ட தளபதி பால்ராஜ் போன்றோர் அந்த மக்களோடுதான் இறுதி ஊர்வலத் தில் கலந்து கொண்டார்கள்.

பதுங்கு குழிகளில் வாசம் புரிவதாக பரப்புரை செய்யப்படுவோர், மக்களுடன் கலந்திருந்த நிகழ்வு சர்வதேசத்தினால் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழ்ச்செல்வனின் எட்டு வயது பெண் குழந்தையும், நான்கு வயது ஆண் குழந்தையும் சீருடை தரித்து, தமது தந்தையின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டமையை, ஐ.நா. சிறுவர் பராமரிப்பாளர்கள் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. ஏனெனில், இனித் தாயகத்தின் புல் [illegible] மிக்கைக் கண்டு [illegible] இறுதி யாத்திரை புரிந்த மக்களின் விடுதலை உணர்வலை களை, புள்ளடி போடும் கருத்துக் கணிப்பு களும் அளக்க முடியாது.

திரண்டெழும் மக்கள் சக்திக்கு முன்னால், அடக்கு முறைகள் பொடிபட உடைபடுமென்பதை வரலாறு மறுபடியும் நிரூபித்துள்ளது.

இம்மக்கள் எழுச்சியை பதிவு செய்திட விரைந்த ஊடகத்தாரை ஓமந்தையில் வைத்து தடுத்து நிறுத்தியது அரசு.

வேவு விமானங்களும், மிகையொலி வானூர்திகளும் வானிலிருந்து செய்த பேரணி குறித்த பதிவுகள், இருள் அரக்கனின் குகைக்குள் ஒளிக்கப்படலாம்.

ஆயினும் தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சியுற்ற நவீன ஊடகத் துறையி னரின் ஆற்றலினாலும் மறுகணமே இப்பதி வுகள் உலகப் பரப்பெங்கும் வலம் வந்தன.

நெஞ்சில் எழுந்த நெருப்புக்கவிதை, நாக்கில் தடம் புரண்டு, கண்ணீராய் வெளி வந்தது காசி ஆனந்தனின் இரங்கல் செய்தியில்.

"நீவிடைபெறும் போது உனக்கு கொடுத்தனுப்ப, என்னிடம் என்ன இருக்கிறது" என்று பார்த்திருந்த மக்களை தேம்பி அழவைத்தான் தாயகக்கவி புதுவை இரத்தின துரை. சோக உணர்வுகள் இறுக்கப்பட்டு, விடுதலை உணர்வுக்கு நெய் ஊற்றி விட்டது. தடை செய்த நாடெல்லாம் தடுமாறும் வகையில், ஓரணியில் திரண்ட புலம் பெயர் மக்களின் குவிமையம் நோக்கிய மனோ நிலை, ஆர்ப்பரிக்கும் பேரினவாதத்தின் அடி முடியை நிச்சயமாக சிதைக்கப் போகிறது.

நாட்டிற்காய் ஒருவரை அனுப்பிய வீடெல்லாம், வீதியில் அணி திரண்டதை, சாட்சிப்படுத்தியது தமிழ்ச்செல்வனின் இறுதிப் பயணம்.

நடந்த சம்பவத்தின் பின்னணியை நோக்கினால், அநுராதபுர தாக்குதலினால் நிலை குலைந்த அரசு, பதிலடி கொடுக்க மன்னார் முகமாலையிலிருந்து பாரிய படை நர்வினை மேற்கொண்டு பலத்த இழப்புகளோடு பின்வாங்கிச் சென்றது தெளிவாகிறது. அடுத்த நாள் தெரிவு செய்யப்பட்ட [illegible] கிளிநொச்சியில் [illegible]டது.

தமிழ்ச்செல்வனின் வீரச்சாவு பற்றிய செய்தியை விடுதலைப் புலிகள் அறிவிக்கும் வரை அரச தரப்பிலிருந்து எதுவித செய்தியும் வரவில்லை என்பதே இங்கு கவனிக்கபட வேண்டிய விடயமாகும்.

இலக்குகளைத் தெரிவு செய்திருந்தாகவும் தாக்குதலில் பாதிக்கப் படுபவர் எவரென்பதை அவர்கள் தெரிந்திருக்கவில்லை என்பதையே இவை உணர்த்து கின்றன.

தமிழ்சொல்வன் மீது நடத்தப்பட்ட துல்லியமான தாக்குதலென கோத்தபாய கூறுவதன் பின் புலத்தில் கற்பனைக் கதையாடல் கலந்திருப்பதைப் புரிந்துகொள்ளலாம். நடந்த அரசியல் படுகொலைக்கு, தானே சூத்திரதாரியெனக் கூறுவதானூடாக, வெற்றிச் செய்தியை தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இந்த யுத்தப்பிரபு, நீட்டி முழங்கிய நெடுங்கதைகளை, சிங்களம் விழுங்கிக் கொண்டதென்பது ஆச்சரியமான விடயமல்ல.

விடுதலை நெருப்பாற்றில் இணைந்த இப்புதிய நெருப்பு சங்கமிக்குமிடத்தில் பேரினவாதம் பொசுங்கிப் போவதை, அதன் ஆதரவுச் சக்திகள் நிச்சயம் உணரும்.

மருத்துவப் போராளி, மாபெரும் அரசி

**சீ. இதயச்சந்திரன்**

யல் குறியீடாகவும், முகவரியாகவும் பரிமாணமடைந்த நிகழ்வுப் போக்கு, தேசியத் தலைவனின் வழிகாட்டலில் உருவான தென்பதையும் உணர்தல் வேண்டும்.

தற்போது தமிழ்ச்செல்வன் வகித்த அரசியல் துறையினை, மார்க்சிய பின்புலத்தைக் கொண்ட பா.நடேசன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். நீண்டகால போராட்ட அனுபவமும், சிறந்த நிர்வாகத் திறமையும் கொண்ட மூத்த போராளி அவர்.

எம் தேசத்து சமூகவியலையும், பண்ணாட்டு அரசியலின் நுட்பங்களையும் ஆழமாக உய்த்துணரக்கூடிய ஆளுமை கொண்ட நடேசனை இப்பதவிக்கு தேசியத்தலைவர் தேர்ந்தெடுத்தது மிகவும் பொருத்தமானதாகும். விழவிழ எழும் விடுதலைச் சக்திகள், புதிய நெருப்பாக தினம் தினம் தோன்றிக் கொண்டே இருப்பார்கள்.

விதைகுழிக் கல்லறைகள் இனிப் பேசும் காலம் வரும். *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுழிபுரம் வயல்களில் நெற்பயிர்களை மூடிப் புற்கள்

சுழிபுரம் - _றாளை வயல்களில் நெற்பயிர்களை மூடிப் புல் பூண்டுகள் நிறைய வளர்ந்துள்ளன. வயல் சொந்தக்காரர்கள் புல் பூண்டுகளை பிடுங்க அதிக செலவு செய்ய வேண்டியநிலைமை ஏற்பட்டுள்ளது. காலை முதல் மாலை வரை கூலியாள்கள் புல் பிடுங்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் புல் பிடுங்கும் வேலையில் நூற்றுக் கணக்கான பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து பெய்துவரும் மழையால் புற்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன. (203-28)


*வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்*

சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான

**கேள்வி அறிவித்தல் 2008**

10.11.2007ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் கேள்வி அறிவித்தல் விளம்பரத்தை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்.

**திருத்தம்**

இல.08, தெரிவுசெய்யப்படும் கேள்விகளுள் கேள்வித்தொகையின் ½ பகுதியை 03.12.2007ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளவேண்டும்.

**மேரி ஜோசப் சாந்தசீலன்**
*செயலாளர்,*
*வலி.தென்மேற்குப் பிரதேசசபை,*
*மானிப்பாய்.*

*வலி.தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.* (சி/54397)



**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
*19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.*

**கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

சொந்தப் பண்ணைக்கு வளர்க்கப்பட்ட பிறிமா இனம் (பிறவுண்) முட்டை இடும் கோழிக் குஞ்சு (சகல தடை மருந்துகளும் கொடுக்கப் பட்டது) 2 மாத வளர்ச்சி. விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:* **ஞானசெந்தூரம்,**
"அபிராமி மகால்", அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
**021 226 3403**

**காணிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் புத்தூர் - சுன்னாகம் வீதிச் சந்திக்கும் புத்தூர் சாவகச்சேரி வீதிச் சந்திக்கும் இடையில் அமைந்த காணிகளாகும்.

1. புத்தூர் தபாற்கந்தோருக்கு கிழக்குப் பக்கமாக உள்ள 10½ பரப்பு குடியிருப்புக் காணி கிணற்றுடன் குடியிருக்க/தொழில் முயற்சி ஆரம்பிக்க உகந்த இடம்.
2. புத்தூர் - சாவகச்சேரி வீதிச் சந்திக்கு மேற்குப் புறமாக உள்ள காணி 3 பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி வர்த்தக/தொழில் முயற்சிகளுக்கு வாய்ப்பான நிலையம்.

**தொடர்புகளுக்கு: 077 6736408**
**திருமதி தே.தி.சண்முகநாதன்**, மயிலணி, சுன்னாகம்.



**கண்ணீர் அஞ்சலி**



*எமது வாழ்வக இல்லத்தில் மிக நீண்ட காலமாக தன்னலமற்ற சேவையாற்றி வந்த*

**இ.நா.தியாகராஜா**

*அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் தூய ஆன்மா எல்லாம்வல்ல இறைவனின் தூய திருவடிகளில் நித்திய அமைதி பெறுவதாக.*

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம். (சி/54391)

**வாழ்வக சமூகம்.**



**உமது துயரில் நாமும்...**



**அமரர் இ.கந்தசாமி**

*(முன்னாள் அதிபர், கம்பர்மலை வித்தியாலயம்)*

**ஆசானே!**

**"காலமெனும் நெடுங்கடலில்**
**கனவுடனே காத்திருப்போம்!**
**ஞாலமிது இருக்கு மட்டும்**
**உம் வரவை பார்த்திருப்போம்"**

*17.11.2007 அன்று அன்னாரது இறுதி நிகழ்வில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

**பழைய மாணவர் சங்கம்,**
யா/கம்பர்மலை வித்தியாலயம்,
கொம்மாந்துறை, வல்வெட்டித்துறை.

ஐக்கிய இராச்சியக் கிளை,
லண்டன் மாநகர். (67973)


## மரண அறிவித்தல்கள்

### *திருமதி சங்கரப்பிள்ளை சற்குணம்*



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது மல்லாகத்தில் வசித்தவருமாகிய திருமதி சங்கீரப்பிள்ளை சற்குணம் அவர்கள் 15.11.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு - சின்னம்மா தம்பதியரின் புதல்வியும் சற்குணசிங்கம், அருணாசலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணமூர்த்தி, சச்சிதானந்தமூர்த்தி, கிருஷா (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தாயும் புஸ்பலீலா, வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியும் தர்மதா, ஆதவன், வெண்ணிலா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2007) சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**கிருஷா** *(மகள்)*
*மாவட்ட வைத்தியசாலை,*
*தெல்லிப்பழை.*

*நீலியம்பனை,*
*மல்லாகம்.* (67971)

### *நடராசா சிறிரஞ்சன்*



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சிறிரஞ்சன் லண்டனில் 15.11.2007 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அமரர் நடராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் சிறிரங்கநாதன், ஜெயசிறி (லண்டன்), ஜெயராணி (லண்டன்), சிறிதரன் (லண்டன்), சிறிகாந்தன், ஜெயராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருள்நாயகி, செல்வராஜா, சுரேந்திரன், லோஜினி, கோகிலவாணி ஆகியோரின் மைத்துன ரும் மௌனிகா, லக்ஷிகா, திவாகரன், அபிலாஷ் ஆகியோரின் மாமனும் யசோதரன், டிசானி ஆகியோரின் சிறிய தகப்பனும் தேனுஜன், ப்ரித்திகா ஆகியோரின் பெரியதகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு.தெற்கு,*
*காளிகோயிலடி,*
*வட்டுக்கோட்டை.* (67972)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## பெரிய மதவடி குடியிருப்பில் கிணறுகள், மலசல கூடங்கள்

இருபாலை,நவ.17

சுன்னாகம் பெரிய மதவடிக் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கென மலசலகூடங்கள் மற்றும் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி துரிதகதியில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த மாதமளவில் மேற்படி குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்கள் மலசலகூட வசதிகள் மற்றும் கிணற்று வசதிகளின்றி பெரிதும் அல்லற்படுவது பற்றி உதயன் செய்தி வெளியிட்டிருந்தது. அதன் பலனாக அப்பகுதி மக்களுக்கென தன்னார்வுத் தொண்டு நிறுவனம் ஒன்று மக்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ப குழாய்க் கிணறுகள், மலசலகூடங்கள் என்பவற்றை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி மக்கள் மலசலகூட வசதிகளின்றி, குடிதண்ணீர் வசதிகள் இன்றி பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். தற்போது துரிதகதியில் அமைக்கப்பட்டுவரும் மலசலகூடங்கள் மற்றும் குழாய்க்கிணறுகள் போன்றவற்றின் வேலைகள் விரைவில் பூர்த்திசெய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. (203-79)

## மாலைவேளைப் பயணத்தில் மக்களுக்குச் சிரமங்கள்

யாழ்ப்பாணம், நவ.17

படையினர் வாகனத் தொடரணி செல்லும்போது வல்லையில் தடுத்து நிறுத்தப்படுபவர்கள் பெரும் சிரமங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

மாலை வேளைகளில் வேலைகளுக்கு சென்று திரும்பும் பெண்கள் உட்பட அனைவரும் மணித்தியாலக் கணக்காக வல்லை முனியப்பர் கோயிலடியில் தடுத்து நிறுத்தப்பட்டு காத்து நிற்க நேரிடுகிறது.

இந்த நேரத்தில் அந்தப் பகுதியில் குடிதண்ணீர் வசதி இல்லாமையால் யாழ்ப்பாணத்தில் இருந்து பெற்றோர்களுடன் திரும்பும் குழந்தைகள் தாகத்தினால் அழுது துடிப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இந் நிலையில் முனியப்பர் கோயிலடியில் பிரதேசசபையோ அல்லது அரசசார்பற்ற நிறுவனமோ மனிதாபிமான அடிப்படையில் பிரயாணிகள் குடித் தண்ணீர் பெறுவதற்கான வசதியை ஏற்படுத்த வேண்டும் என நாளாந்தம் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் கேட்கின்றனர். (203-83)


**பொன் விழா ஆண்டு -2007**
**சர்வதேச லயன்ஸ் கழகங்கள்**
We Serve

மாவட்டம்: 30 6B1 - இலங்கை, வடபிராந்தியம்

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**

நடத்தும்

**கல்விசார் சேவைத்திட்டம்**
சண்டிலிப்பாய் கோட்டத்தில்

**2007 - ஆண்டு 5**

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களை ஊக்குவிக்கும்

**பாராட்டு வைபவம்**

*காலம்:* நாளை (18.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
*இடம்:* துரைஐயா மண்டபம், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

*முதன்மை விருந்தினர்:*
திரு. **ப.விக்னேஸ்வரன்**
*(வலயக் கல்விப்பணிப்பாளர்)*

*சிறப்பு விருந்தினர்:*
திரு. **க.கந்தசாமி,**
*(கோட்டக் கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய்)*

*கௌரவ விருந்தினர்கள்:*
**லயன் ச.இரவீந்திரா**
*(மாவட்ட இணைப்பாளர் (கல்வி), சர்வதேச லயன்ஸ் கழகம் -306B1)*
**லயன் B.R.ரஞ்சன்**
*(பிராந்தியத் தலைவர் - பிராந்தியம் - 7, சர்வதேச லயன்ஸ் கழகம் - 306 B1)*
**லயன் C.சுந்தரேஸ்வரன்**
*(வலயத் தலைவர் - வலயம் - 14, சர்வதேச லயன்ஸ் கழகம்- 306 B1)*
திரு. **ஆ.சி.நடராசா**
*(நிர்வாகப் பணிப்பாளர், தினக்குரல்)*

பெரியோர்கள், கல்விசார் பிரமுகர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பங்குபற்றி சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

லயன் த.ஸ்ரீவிமலேஸ்வரன்,
கழகத் தலைவர்.

லயன் சி.நாகையா,
லயன் அ.மு.அருணாசலம்,
சேவைத்திட்ட இணைப்பாளர்கள். (67969)



**அரசாங்க அறிவித்தல்**

*யாழ்.மாவட்டச் செயலகம்,*

**அலுவலக இயந்திரங்களும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும் வழங்குவதற்கான கேள்விகோரல்**

யாழ்.மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலகங்களுக்குத் தேவையான பின்வரும் அலுவலக இயந்திரங்களும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.200/= உம் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக 5,000/= உம் செலுத்துதல் வேண்டும். பொருள்களை கொழும்பில் வழங்குவதற்கான கூறுவிலைகளும் அவற்றை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வழங்குவதற்கான கூறுவிலைகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படவேண்டும். மேலும் இயந்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் உத்தரவாத காலத்திற்கான சேவைகளும் அதற்குப் பிந்திய பராமரிப்புச் சேவைகளும் யாழ்ப்பாணத்தில் செய்து கொடுக்கக்கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தையும் பொருள்கள் தொடர்பான விவரத்தையும் நிபந்தனைகளையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, **மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என விலாசமிடப்பட்டு மேலுறையின் இடதுபக்கமேல் மூலையில் அலுவலக இயந்திரங்களும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் என குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 30.11.2007ஆம் திகதி பி.ப. 2மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படவேண்டும். அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு கேள்விப்பெட்டி மூடப்பட்டு உடனடியாக அதேநேரம் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**1) அலுவலக இயந்திர உதிரிப்பாகங்கள்**
- a) Spare parts for photocopier
- b) Printer Ribbons
- c) Cartridges for Printers and Faxes
- d) Toners for Photocopiers and Printers
- e) Computer Key Boards
- f) Computer Mouses

**2) றோணியோ இயந்திரம்**
- a) Rhonio Machine (Manual)
- b) Digital Copy Printer

**3) பக்ஸ் இயந்திரம்**

**கே.கணேஷ்,**
*தலைவர் கேள்விச்சபை,*
*அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும், யாழ்ப்பாண மாவட்டம்.* (சி/54393)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜே.வி.பியைத் 'தாஜா' செய்ய புலிகள் மீது தடை விதிப்பு?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு நாடாளு மன்றத்தில் முக்கிய பலப் பரீட்சையை நாளை மறுதினம் சந்திக்கவிருக்கின்றது.

'மஹிந்த ராஜபக்ஷ சகோதரர்கள் அன்ட் கம்பனி'யின் கெடுபிடிகளாலும், போக்குகளாலும், குடும்ப ஆதிக்கத்தாலும் அரசுக்குள் அதிருப்தியுற்ற மூத்த தலைவர்கள் மற்றும் எம்.பிக்கள் பலர் அரசிலிருந்து வெளியேறி எதிரணிப் பக்கம் தாவலாம் என்ற சூழ்நிலையில் நாளை மறுதினம், அரசின் வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முக்கிய வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெற உள்ளது.

அரசுக்கு எதிராக எதிரணி எல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கும் சூழலில், அரசுக்குள்ளும் அரசுத் தலைமைக்கு எதிரான புகைச்சல் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதால், இவை எல்லாம் சேர்ந்து வரவு - செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசின் காலை முற்றாக வாரி விடலாம் என்ற எதிர்பார்ப்பு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது.

ஆனால், இலங்கை நாடாளுமன்றத்தில் கட்சிகளின் ஆதரவு நிலை தொடர்பான அட்சரகணிதக் கணக்குகளை ஆராய்வோர் ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூறுகின்றனர். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசைக் கவிழ விடுவதில்லை என்ற ஒரு தீர்மானத்தை ஜே.வி.பி. எடுக்குமானால், அதை செயலில் உறுதிப்படுத்தக்கூடிய வலிமை இன்று அக்கட்சிக்கு உள்ளது என்பதே அதுவாகும். இந்த யதார்த்தம் அரசுத் தலைமைக்கும் நன்கு புரியும்; தெரியும்.

ஆகவே, ஜே.வி.பியை 'தாஜா' செய்து சமாளிப்பதன் மூலம் வரவு - செலவுத்திட்டம் மீதான முதலாவது கண்டத்தை நாளை மறுதினம் இலகுவாகத் தாண்டி விடலாம் என்பது அரசுத் தலைமையின் கணிப்பீடு.

ஆனால், வரவு - செலவுத்திட்டத்தின்போது அரசைக் காப்பாற்றுவதற்கு ஜே.வி.பி. நான்கு முன் நிபந்தனைகளை விதித்திருக்கிறது. அரசு - புலிகள் இடையேயான யுத்த நிறுத்த உடன்பாட்டை ரத்துச் செய்ய வேண்டும் என்பது அதில் முக்கியமான ஒரு கோரிக்கை.

வரவு - செலவுத் திட்டத்தில் தப்பிப் பிழைப்பதற்காக - ஜே.வி.பியின் ஆதரவை எப்படியும் வளைத்துப்போடும் நோக்கில் அதன் காலில் விழுவது போல - இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதாக அறிவிப்பது அரசுத் தலைமைக்கு அவமானமானது. அத்தோடு, அமைதிப் பேச்சுமூலம் சமரசத் தீர்வு காணுமாறு சர்வதேசமும் இலங்கை அரசு உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளை ஒரே குரலில் வற்புறுத்தி நிற்க, அந்த முயற்சிகளுக்கு நிரந்தர வேட்டு வைப்பதுபோல யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அரசுத் தரப்பே முன்னின்று முறிப்பது சர்வதேச ரீதியில் அரசுக்கு நெருக்கடிகளையும் நெருக்குதல்களையும் தரக்கூடியதும் கூட.

ஆகவேதான் இதற்கு மாற்று வழி ஒன்றை அரசுத் தலைமை நாடியிருப்பதாகக் கூறப்படுகின்றது. அந்த உத்தியை அரசுத் தலைமை செயற்படுத்துவதற்கான வாய்ப்பான சூழலை அமெரிக்காவே இலங்கை அரசுக்கு இச்சமயத்தில் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

அமெரிக்க அரசு, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கணக்குகளை முடக்கி வைக்கத் தீர்மானித்திருப்பது தெரிந்ததே. அந்த அமைப்பு ஊடாகப் புலிகளுக்கு நிதி செல்வதாகக் குற்றம் சுமத்தியே அமெரிக்கா இந்த நடவடிக்கையை இந்தச் சமயத்தில் மேற்கொண்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ள ஜே.வி.பி., புலிகள் இயக்கத்தை அமெரிக்கா தடை செய்தமைபோல இலங்கை அரசும் தடைசெய்யவேண்டும் எனத் திரும்பவும் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கோரியிருக்கின்றது.

இதையே இப்போது தனக்கு வசமான ஆயுதமாக - உத்தியாக - பயன்படுத்துவது குறித்து அரசுத் தலைமை தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது.

வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றில் நடைபெற முன்னர், புலிகள் இயக்கம் மீதான தடையைத் திடீரென அறிவித்துப் பரபரப்பை ஏற்படுத்தி, ஜே.வி.பியை நாடாளுமன்றத்தில் தனக்கு எதிராகச் செயற்படாமல் தற்காலிகமாகவேனும் தடுக்கமுடியும் என்ற தந்திரோபாயத்தையே அரசுத் தலைமை சிந்திக்கின்றது.

2002 இல், தமது இயக்கம் மீதான தடையை அப்போதைய ரணிலின் அரசு நீக்கும்வரை அந்த அரசுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்ய முடியாது எனப் புலிகள் அடம்பிடித்து நின்றார்கள் என்பது தெரிந்ததே. அதே போல இப்போது புலிகள் இயக்கம் மீது அரசு மீண்டும் தடையை விதிக்குமானால், அதைக் காரணம் காட்டி புலிகளே தம்பாட்டில் இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து வெளியேறும் முடிவைப் பிரகடன்ப்படுத்துவர், அந்த ஒப்பந்தத்தை நிரந்தரமாக முறிக்கும் வேலையை அரசுத் தரப்புச் செய்யவேண்டியதில்லை என அரசுத் தலைமை கருதுகின்றதாம்.

ஆக, புலிகள் இயக்கம் மீது மீளத் தடையை விதித்து, அதன் மூலம் நாடாளுமன்றில் ஜே.வி.பியின் ஆதரவைத் தொடர்ந்து அரசுக்குத் தக்க வைத்தல் மற்றும் புலிகள் தாங்களாகவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுகின்றனர் என அவர்களைக் கொண்டே அறிவிக்கச் செய்தல் என ஒரே கல்லில் பல மாங்காய்களுக்கு இந்தத் தந்திரம் மூலம் திட்டமிடுகிறது அரசுத் தலைமை.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதி புலிகளுக்குப் போகின்றது என்ற காரணத்தைக் காட்டி அந்த அமைப்பின் நிதி மற்றும் சொத்துக்களை தான் முடக்கியிருப்பதாக அமெரிக்கா விடுத்திருக்கும் அறிவிப்பு, அதையொட்டியே புலிகள் இயக்கத்தை இலங்கையில் இலங்கை அரசு தடை செய்கின்றது என்ற பொருத்தமான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

# ஐ.தே.கவின் எம்.பிக்களை சி.ஐ.டி. மூலம் திரட்டி அடி பணிய வைப்பதற்கு முயற்ச்சி

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் முறைப்பாடு



கொழும்பு, நவ. 17

நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளை நாடாளுமன்றிற்கு வெளியே ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தும் வகையில் அவர்களைக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் முறையற்ற விதத்தில் விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் குற்றம் சுமத்தினார்.

கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றினார் என்றுகூறி ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டார் என்றும் -

வஜிரஅபயவர்தன மற்றும் ஏர்ள் குணசேகர ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் -

ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை குற்றப் புலனாய்வுப் பொலிஸாரின் அழுத்தத்தின் மூலம் அடிபணிய வைக்கும் எத்தனம் இது என்று கூறிய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் இது தொடர்பாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை கொண்டு வந்து உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றினார் என்று கூறி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் வியாழன்று விசாரணைக் குட்படுத்தினர்.

அதேபோல், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விஜிர அபயவர்தன மற்றும் ஏர்ள் குணசேகர ஆகியோரும் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

வங்கிப் பங்குகளை பங்குச் சந்தையில் வாங்குவதற்காக வெளிநாட்டில் இருந்து இராஜசிங்கம் என்பவர் இலங்கைக்குப் பணத்தை அனுப்பியிருந்தார்.

இந்தப் பணத்தைக் கையாள ரவி கருணாநாயக்க பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார். இதற்கு இலங்கை மத்திய வங்கி அனுமதி வழங்கியிருந்தது.

இது சட்டப்படியாக இடம்பெற்ற ஒரு செயல். இப்பணம் உரியமுறையில் கணக்கில் இடப்பட்டது.

ஆனால், இதை ஒரு சட்ட விரோத நடவடிக்கைபோல் எடுத்துக் கொண்டு குற்றப் புலனாய்வுப் பொலிஸார் ரவி கருணாநாயக்காவை விசாரணை செய்திருக்கின்றனர்.

இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும்செயல். நாடாளுமன்ற உறுப்பினர்களை இச் சமயத்தில் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் மூலம் நெருக்குதல் கொடுத்து அடி பணியவைக்கும் செயலாகவே நாம் இதைக் காணுகிறோம்.

இவ்வாறான நட்வடிக்கை தொடர்பாக விசாரணை நடத்தி உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார் அவர். (சி)

## மட்டுநகர் விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ.17

மட்டக்களப்பு நகரப் பகுதியிலுள்ள சிவானந்த விளையாட்டு மைதானத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வீதிவிபத்துச் சம்பவத்தில் சிக்கி இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் முச்சக்கர வண்டி ஒன்று நேருக்கு நேர் மோதியதில் ஒட்டோவில் பயணம் செய்த இருவரே உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் நாவற்குடாவைச் சேர்ந்தவர்கள் என்று சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## செயலமர்வு ஒத்திவைப்பு

நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் தரம் 7, தரம் 11 ஆகியவற்றில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக இன்று நடைபெறவிருந்த செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் ஆசிரியவள நிலையத்தில் மேற்குறிப்பிட்ட செயலமர்வு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டது. (அ-1)

# புலிகளின் செயற்பாடுகளைத் தடைசெய்ய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்!

## நாடாளுமன்றில் வெளிவிவகார அமைச்சர் உறுதி

கொழும்பு, நவ. 17

பயங்கரவாதச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைத் தடைசெய்வதற்கு இலங்கை அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களைச் சேகரிப்பதிலும், நிதி திரட்டுவதிலும் ஈடுபட்டதாகத் தெரிவித்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை அமெரிக்கா தடைசெய்து அதன் சொத்துகளையும் முடக்கி உள்ளது. அமெரிக்க அரசின் இச்செயலுக்கு அமைச்சர் போகொல்லாகம நடாளுமன்றத்தில் நன்றி தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளை அமெரிக்கா தடை செய்துள்ளமை இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அழித்து ஒழிப்பதற்கான முன்னோடி நடவடிக்கையாக அமைந்துள்ளது.

அதேபோன்று ஏனைய நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொர்டர்பாக நாம் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தியதன் எதிரொலியாக இந்தியா, கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொண்டர் அமைப்பு என்ற பெயரில், கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைக்களுக்கு என நிதி சேகரித்து, புலிகளின் இயக்கத்திற்கு ஆயுதம், வெடிமருந்துகள் மற்றும் ஆயுத உடைமைகளையும் கொள்முதல் செய்து வழங்கிவந்துள்ளது. இப்பொழுது சர்வதேச சமூகம் இந்த உண்மையை அறிந்துகொண்டுவிட்டது.

இதன் காரணமாகவே அமெரிக்க அரசு தமிழர் புனர்வாழ்வு கழகத்தை தடை செய்து அதன் சொத்துகளை முடக்கி வைத்துள்ளது. அதேவேளை, இந்த அமைப்புடன் தொடர்புடைய இணை அமைப்புக்களின் இயக்கத்தையுமே அது முடக்கியுள்ளது. இதற்கு நாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். - எனவும் அமைச்சர் ரோஹித போகொல்லாகம கூறினார். (சி)

## ஹாட்லி பழைய மாணவர் சங்கக் கூட்டம்

பருத்தித்துறை, நவ. 17

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் இலங்கை வங்கியின் இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.பால சுப்பிரமணியம் தலைமையில் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறுமென இணைச்செயலாளர் அறிவித்துள்ளார். (1-218)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 02 | ஞாயிற்றுக்கிழமை 18.11.2007 |
| திதி : அட்டமி | முற்பகல்: 10.47 |
| நட்சத்திரம் : | அவிட்டம் முற்பகல் : 09.49 |
| சுபநேரம் | : 09.08 - 10.38 |
| ராகுகாலம் | : 04.30 - 06.08 |

## திருமுறை முற்றோதல் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 17

அகிலஇலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் பன்னிரு திருமுறை முற்றோதல் நாவலர் வீதியிலுள்ள கடையிற்சுவாமி குருவார அன்ன சத்திர சிவன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை தொடக்கம் நடைபெற உள்ளது.

தினமும் காலை 7.30 மணிக்கு முற்றோதல் ஆரம்பமாகி நடைபெறும். (1)

## 3 பிள்ளைகளின் தந்தை ஆணைக்குழுவில் சரண்

யாழ்ப்பாணம், நவ. 17

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துக் குடும்பஸ்தர் ஒருவர் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளார்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த 34 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சரணடைந்துள்ளவராவார். (அ-50)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாணம் ஸ்ரீ ஐயப்ப மணி கண்ட சபையின் 10 ஆவது ஆண்டு மகரஜோதி சபரிமலை யாத்திரை விரதம் இன்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு யாழ். கந்தர்மடம் செட்டியன் தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் கணபதி ஹோமம் மாலை அணியும் நிகழ்வுடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தினமும் மு.ப. 11.30 மணி தொடக்கம் ஒரு மணி வரை பஜனை, பூஜை, அன்ன தானம் என்பவற்றுடன் யாத்திரை விரதம் அனுஷ்டிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (203)

* * *

சுழிபுரம் , நவ. 17

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் காசிகாண்டப் புராணப் படிப்பு இன்று சனிக்கிழமை தொடக்கம் தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தமிழ்க்கார்த்திகை மாதத்தின் முப்பது நாள்களும் இப் படிப்பு நடைபெறும்.

காசிகாண்டப் படிப்பு இந்த ஆலயத்தில் பல வருடங்களாகத் தொடர்ந்து தனியொருவர் உபயமாக நடைபெற்று வருகின்றது. (203-28)

* * *

சுழிபுரம் , நவ. 17

பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தன்வள்தலி விக்கிரக மண்டலாபிஷேகம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெறவுள்ளது. இந்த மண்டலாபிஷேக கிரியைகளை ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ என்.சோமஸ்கந்தக் குருக்கள் நிறைவு செய்து வைப்பார். (203-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படினும் அரசு பதவி விலகவேண்டும் என்று கட்டாயமல்ல

கொழும்பு, நவ. 17

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசு தோற்றாலும் கூட நாடாளுமன்றத்தை ஜனாதிபதி உடன் கலைக்கவேண்டும் என்பது கட்டாயமல்ல.

மீண்டும் ஒரு புதிய வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி அனுமதிக்க முடியும்.

எனினும், இரண்டாவது தடவையும் - புதிய வரவு - செலவுத் திட்டமும் - நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்படும் என்றால் ஜனாதிபதி உடனடியாக நாடாளுமன்றைக் கலைக்க வேண்டும்.

அரசமைப்பின் 70 (ஈ) பிரிவு இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றது என சட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வரவு - செலவுத் திட்டம் போன்ற நிதிச் சட்டமூலம் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டால் உடனடியாக அரசையும் நாடாளுமன்றத்தையும் கலைத்துத் தேர்தலை நடத்த ஜனாதிபதி உத்தரவிடவேண்டும் என்று எந்தச் சட்டத்திலும் வலியுறுத்தப்படவில்லை.

வரவு - செலவுத் திட்டம் போன்ற நிதிச் சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் முதல் தடவையாகத் தோற்கடிக்கப்படும் போது ஜனாதிபதி மூன்றுவித நடவடிக் கைகளை எடுக்க முடியும்.

அவர் -

அ) அந்த அரசையும் நாடாளுமன்றையும் கலைத்துப் புதிய பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடலாம். அல்லது -

ஆ) இருக்கும் அரசையே புதிய நிதிச் சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பிக்க அனுமதிக்கலாம். அல்லது -

இ) புதிய அமைச்சரவை ஒன்றின் கீழ் இரண்டாவது நிதிச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுவதற்கு அனுமதிக்கலாம்.

ஆக, முதலாவது நிதிச் சட்டமூலம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் புதிய அரசினால் அல்லது பழைய அரசினால் இரண்டாவதாக சமர்ப்பிக்கப்படும் நிதிச் சட்டமூலமும் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்படுமானால் ஜனாதிபதி உடனடியாகவே நடாளுமன்றைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடவேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அதைத்தவிர அவருக்கு வேறு வழியில்லை.

- இவ்வாறு தற்போதைய அரசமைப்பு வலியுறுத்துகின்றது.

ஆனால், 1972 அரசமைப்போ அல்லது அதற்கு முந்திய சோல்பரி அரசமைப்போ நிதிச்சட்டமூலம் ஒன்றில் அரசு தோற்கடிக்கப்படுமானால் அந்த அரசு உடன் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி நின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் -

தற்போதைய அரசமைப்பில் முதலாவது நிதிச் சட்டமூலம் தோற்கடிக்கப் பட்டாலும், இரண்டாவது நிதிச் சட்டமூலத்தை நிறைவேற்றும்வரை அரசு தொடரலாம் என்று கூறப்பட்டாலும் -

முதலாவது நிதிச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டு எவ்வளவு காலத்துக்குள் அடுத்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பதற்கான கால வரையறை ஏதும் தெளிவு படுத்தப்படவில்லை.

ஆகவே; முதலாவது வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் தோல்வியுற்ற பின்னர் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் எப்போது சமர்ப்பிக்கப்படவேண்டும் அல்லது கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து தற்போதைய அரசமைப்பில் வரையறை இல்லை.

அத்தோடு, முதல் வரவு - செலவுத் திட்டம் தோல்வியுற்ற நிலையில் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காமல் இடைக்கால நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்துடன் அரசு ஆட்சியைக் கொண்டு நடத்தினாலும், அதைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதற்குதற்போதைய அரசமைப் பில் விசேடமான ஏற்பாடுகள் ஏதும் இல்லை.

மேலும் -

முதலாவது வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவுத் திட்டம் எத்தகையதாக அமைய வேண்டும் என்பதும் தற்போதைய அரசமைப்பில் தெளிவுபடுத்தப் படவில்லை.

தேவையானால், முதல் வரவு - செல வுத் திட்டத்தையே மீண்டும் சமர்ப்பிக்க முடியும் அல்லது அதைத் திருத்திச் சமர்ப் பிக்க முடியும், அல்லது புதிய வரவு - செலவுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்கலாம்.

- இப்படி சட்டத்துறை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

## திருமுறிகண்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலகத்தை இலக்கு வைத்து குண்டுகளை வீசின.

இந்தத் தாக்குதலால் தொழிலகத்தின் பல கோடி ரூபாக்கள் பெறுமதியான பொருள்கள் மற்றும் படகுகள் அழிந்துள்ளன. இந்தத் தொழிலகம் அரசில் பதிவுசெய்யப்பட்ட தனியார் தொழிலகம் ஆகும்.

இந்தத் தொழிலகத்தை மகேந்திரன் என்பவர் முதலிட்டு நடத்தி வந்தார்.

ஆழிப்பேரலை அழிவின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் உதவிகளைச் செய்ய தொண்டு நிறுவனங்களின் கோரிக்கைக் கேற்ப 350 வரையான படகுகளை இந்தத் தொழிலகம் உருவாக்கியுள்ளது. தற்போதும் கிளிநொச்சி அரச அதிபரின் கோரிக்கைக்கிணங்க, ஒரு தொகுதிப் படகுகள் உற்பத்தி நடைபெற்று வந்துள் ளன எனவும்-

இத்தொழிலகத்தில் திரு முறிகண்டியில் வசிக்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் இங்கு பணிபுரிந்து, தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொழிலகத்தை அழிப்பதற்காக 6 குண்டுகள் வீசப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகிறது.

இந்த குண்டுவீச்சின்போது தொழிலகம் அருகில் உள்ள 12 வீடுகள் அழிந்தும் சேதமாகியும் உள்ளன. வீடு ஒன்றிற்குள் இருந்த பெண் ஒருவர் படுகாயமடைந்து உயிராபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமடைந்தவர் முறிகண்டி அரை ஏக்கர் திட்டத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் ரூபி (வயது - 32) என்றும் அவர் 3 பிள்ளைகளின் தயார் என்றும் தெரியவந்துள்ளது.

இந்த வான்குண்டுத் தாக்குதலின்போது திருமுறிகண்டிக் கோவிலுடன் இருந்த கடைகள் சேதமாகியுள்ளன. கடைகளின்பொருட்கள்சேதமாகின. கூட்டுறவுச் சங்கம் ஒன்றும், பாடசாலை, அஞ்சலகம் மற்றும் வீடுகள், கடைகள் ஆகியனவும் சேதமாகியுள்ளன.- என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## தமிழர்களுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளுக்கும் இடையில் செயல் பட்டு நீதியான மற்றும் நீதியற்ற நிதி தொடர் பான விடயங்கள் அமெரிக்காவுக்கு தெரியவந்ததையடுத்தே அதன் சொத்துகளை அமெரிக்கா முடக்கியது.

இந்தப் புதிய அறிவித்தல் நடைமுறையின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் அமெரிக்கப் பிரஜைகள் எவராவது தொடர்புகளைப் பேணுவது சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

### புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட நல்ல சந்தர்ப்பம்

இதேவேளை, தமிழ்மக்கள் உள்ளிட்ட அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நீதியான தீர்வைத் தரக்கூடிய சமாதானப் பேச்சுக்கு தொடர்ந்தும் அமெரிக்கா தனது முழு ஆதரவினை வழங்கும். இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமூலம் தீர்வினைக் காண முடியாது என்றும் அமெரிக்கா திடமாக நம்புகிறது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை ஊடாக புலிகளுக்கான படிப்பினை என்னவென்றால், அவர்கள் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு இது ஒரு நல்லதருணம். இதற்குமேல் இவ்வாறான அரிய சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்காது.

இலங்கை அரசு அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு ஊடாக பெரும்பான்மையான தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மிகவும் காத்திரமான அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டம் ஒன்றை விரைவில் முன்வைக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறது என்றார் - அவர்.

## புலிகள் மீது தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்துக்கு எதிராக அதை வாக்களிக் காமல் தடுக்கச் செய்வதற்கு அரசுத் தலைமை பகீரதப் பிரயத்தனம் செய்வதாகக் கூறப்படுகின்றது.

வரவு - செலவுத்திட்டத்தில் அரசை ஆதரிப்பதற்கு ஜே.வி.பி. நான்கு முன் நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. புலிகளுடன் அரசு செய்து கொண்டுள்ள - 2002 ஆம் ஆண்டின் - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தற்போதைய அரசு முறித்துக் கொள்ள வேண்டும் என்பது அக்கோரிக்கைகளில் ஒன்று.

பௌத்த, சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி., தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அதற்கு ஆதரவான தமிழர் தரப்புகளுக்கும் எதிராகக் கடும் நிலைப்பாட்டைப் பின்பற்றுமாறு அரசை வற்புறுத்தி வருகின்றது.

### பஸில் கோடி காட்டினார்

அத்தகைய ஜே.வி.பியை வளைத்துப்போடும் திட்டமாக - அக்கட்சியை 'தாஜா' செய்யும் முயற்சியாக - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது மீண்டும் தடை விதிப்பதற்கு அரசுத் தலைமை ஆலோசித்து வருகின்றது.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் இத்தகைய தடை அறிவிப்பு ஒன்றை விடுத்தால், அவ்வாறு புலிகளுக்கு எதிராகத் தீவிரப் போக்கை வெளிப்படுத்தும் அரசை கவிழ விடாமல் ஜே.வி.பி. காப்பாற்றி, காபந்து பண்ணும் என அரசுத் தலைமை நம்புகின்றது என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், அவரது சகோதரரும், எம்.பியுமான பஸில் ராஜபக்ஷ, அரச சார்பு ஊடகங்களின் தலைவர்களை ஓரிரு தினங்களுக்கு முன்னர் சந்தித்தபோது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான தமது தமையனாரிடம் இவ்வாறு புலிகள் மீது தடை விதிக்கின்ற அறிவிப்பை விடுக்கும் திட்டம் ஒன்று உள்ளது என்பதையும் அது ஆழமாகப் பரிசீலிக்கப்படுகிறது என்பதையும் கோடிகாட்டினார் என்று கூறப்படுகின்றது.

1998 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து புலிகள் இயக்கம் மீது முதலில் உத்தியோகபூர்வ தடை விதிக்கப்பட்டது. பின்னர் 2002 பெப்ரவரியில் அப்போதைய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அந்தத் தடை அப்போதைய அரசினால் நீக்கப்பட்டிருந்தது. (சி)

## 'பட்ஜெட்' ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத இடைவெளியில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் நிறைய உண்டு எனப் பதில் அளித்தார் அவர்.

"அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமா அல்லது குறையுமா?" எனக் கேட்டபோது -

### துக்ளக்கின் அமைச்சரவை

"துக்ளக்கின் அமைச்சரவையைத் தெரியுமா? அதுபற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? என்று கேட்டார் அமைச்சர் டக்ளஸ். பின்னர் அவரே அக்கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்.

துக்ளக் தான் எம்.பியானதும் தன்னுடன் சேர்ந்து கொள்பவர்களுக்குதுணைப்பிரதமர் பதவி வழங்கப்படும் என அறிவித்தார். இதனால் நாடாளுமன்றத்தில் இருந்த அனைவரும் துக்ளக்கின் பக்கம் சேர்ந்து கொண்டார்களாம். இதுதான் யதார்த்தம் என்றார் அவர்.

''நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அது வடக்கு கிழக்கில் சாத்தியப்படுமா?'' - என்று கேட்கப்பட்டது.

''ஏன் சாத்தியப்படாது என்று நீங்கள் கருதுகின்றீர்கள்? தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் கடந்த முறைபோன்று கூட்டணியினரால் கள்ளவாக்குப் போட முடியாது.

''தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த அரசு கவிழ்க்கப்படுவதைவிரும்பவில்லை. தொடர்ந்து அரசைப் பலவீனப்படுத்த வேண்டும். பலவீனமான அரசு ஒன்று தொடர்ந்து இருக்கவேண்டும் என அவர்கள் நினைக்கின்றார்கள்''- என்றார் அமைச்சர் டக்ளஸ்.

''அரசு கிழக்கு மாகாணத்தில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்தப்போவதாக கூறப்படுகின்றது. இது சாத்தியப்படுமா? உங்களுடைய நிலைப்பாடு என்ன''? - என்றும் கேட்கப்பட்டது.

### கிழக்கில் மாகாணசபைத் தேர்தலில் ஈ.பி.டி.பி போட்டியிட மாட்டாது

''அரசு அப்படித் தேர்தலை நடத்தினால், ஈ.பி.டி.பி. உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும். ஆனால், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாது. இது கொள்கையளவில் எம்மால் தீர்மானிக்கப்பட்ட ஒன்று.'' என்பது அமைச்சரின் பதிலாக அமைந்தது.

அதேவேளை, சர்வகட்சிப் பிரதிநிதிகள் கமிட்டியில் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும், அதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும் அவர் கூறியதோடு, தீர்வுக்கான மாற்றுத் திட்டம் ஒன்றையும் விவரித்தார்.

வடக்குக்கிழக்கிற்குத்தனித்தனியானஇடைக் கால சபைகளை அமைக்கலாம். அதேவேளை, பிரிவினையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் வலியுறுத்தினால் இணைந்த இடைக்கால நிர்வாக சபையையும்உருவாக்கலாம். இந்தியாவும் அதனை ஆதரிக்கும். ஆனால், வடக்கும் கிழக்கும் இன்று சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டு விட்டன.

இதனால்வடக்கு-கிழக்குஇணைந்தஇடைக் கால நிர்வாக சபை அமைப்பதை அரசு நிராகரித்து விட்டது. எது, எப்படியோ தனித்தனியாக வந்து இடைக்கால நிர்வாக சபைகளை உருவாக்கி அங்கு மக்களிடம் நிர்வாகத்தை ஒப்படைப்பதன் மூலம் பிரச்சினைகளை ஓரளவாவது தீர்க்க முடியும் - எனவும் அமைச்சர் டக்ளஸ் [illegible] விவரித்தார். (சி)

## தேசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமுடையனவையே அரசியல் சார்பற்றதாக முன்னெடுக்கப்படவேண்டும்.''

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றனர் முப்படைகளின் முன்னாள் தளபதிகள்.

முன்னாள் சிரேஷ்ட விமானப் படைத் தளபதியான பத்மன் மெண்டிஸ் தலைமையில் ஓய்வு பெற்ற பாதுகாப்புச் சேவைப் பிரதானிகள் நேற்று முன்தினம் மாலை அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினர்.

இந்தப் பேச்சுகளில் முன்னாள் இராணுவத் தளபதிகளான டெனிஸ் பெரேரா, சிறில்ரணதுங்க, ஹமில்டன் வனசிங்க, ஜெரிடி சில்வா, ரொஹான் தலுவத்த, ஸ்ரீலால் வீரசூரிய ஆகிய ஜெனரல்களும், பஸில் குணசேகர, தயா சந்திரசிறி ஆகிய அட்மிரல்களும் பத்மன் மெண்டிஸ், ஹரி குணதிலக, டீக் பெரேரா, ஒலிவர் ரணசிங்க மற்றும் ஜயலத் வீரக்கொடி ஆகிய விமானப் படைத் தளபதிகளும் கலந்துகொண்டனர்.

மூன்று சகாப்தங்களாக எங்கள் நாடு பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதனால் பெருமளவிலான உயிர் மற்றும் உடைமைகள் அழிவடைந்தன. அதுபோலவே சகல துறைகள் தொடர்பான அபிவிருத்திப் பணிகளும் முடங்கியிருக்கின்றன எனச் சுட்டிக்காட்டிய தளபதிகள், பயங்கரவாதத்தை தாய் மண்ணிலிருந்து துடைத்தெறிவதற்கு சகல தரப்பினரும் ஒன்றாகத் தேசிய மட்டத்தில் திட்டமொன்றை முன்வைக்க வேண்டிதன் அவசியத்தையும் விளக்கினர்.

இனப் பிரச்சினையைத் தீர்க்கும்போது பயங்கரவாதத்தை ஒழிப்பதும், அரசியல் தீர்வைத் தேடுவதும் என்ற கொள்கைகள் ஒன்றுக்கொன்று வெவ்வேறான இரண்டு விடயங்களாயினும் அவ்விடயங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டுள்ளன எனவும் முன்னாள் படைத்தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் சமூகத் துறைகளிலும் அவ்வாறு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் தேசியத் திட்டமொன்றத் தயார் செய்வதற்காக சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட தேசியச் செயலகமொன்று அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

மேலும், இந்த முயற்சி முழுமையான அரசியல் சார்பில்லாதிருக்க வேண்டுமெனவும் தாங்கள் இவ்வாறு முன்வருவது நாட்டின் எதிர்கால நலன் கருதியே எனவும் அவர்கள் மேலும் அங்கு குறிப்பிட்டனர்.

அவர்களது சேவைக்காலத்தில் நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக அவர்கள் செலுத்திய அர்ப்பணிப்புத் தொடர்பாக முன்னாள் தளபதிகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, தற்போது தோன்றியுள்ள தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக சகல கட்சிகளுடனும் கைகோர்த்துக் கொண்டு செயற்படுவதற்கு தான் எப்போதும் தயாராகவிருக்கிறார்எனஅவர்களிடம்தெரிவித்தார்.

ஏனைய அனைத்தையும் விட நாட்டின் ஒருமைப்பாடும் அபிவிருத்தியும் முக்கியமானவை எனத் தான் நம்புகிறார் எனவும், ஒன்றிணைந்து குறுகிய காலத்துக்கேனும் ஒன்றாக இயங்குவதற்கு பல தடவைகள் தாம் அழைப்பு விடுத்தமையையும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டினார்.

### தேசிய திட்டத்துக்கான சட்டங்கள்

தளபதிகளினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின்படி சகல கட்சிகளையும் கொண்ட குழுவொன்றின் மூலம் தேசியத் திட்டமொன்றுக்கான சட்ட நகலைத் தயார் செய்வதற்கு தான் மிக விருப்பமாக உள்ளார் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பேச்சு மூலம் காணப்படும் அரசியல் தீர்வுக்கு, தான் விருப்பமாக இருந்தாலும், பயங்கரவாதத்தைப் பொறுத்துக் கொள்வதற்கு தான் ஒருபோதும் தயாரில்லை எனவும் ஜனாதிபதி அங்கு வலியுறுத்திக் கூறினார். அனைத்துக் கட்சிக் குழுவின் யோசனைகள் தாமதமடைதவற்கான காரணத்தையும் ஜனாதிபதி தெளிவு படுத்தினார்.

முன்னைய அரசினால் முன்வைக்கப் பட்ட யோசனைகளுக்கு கட்சிகளின் பெரும்பான்மை இணக்கம் இருக்காமையால் அவை தோல்வி கண்டன எனவும், சகல அரசியல் கட்சிகளும் ஒன்றுபட முடியாதெனவும், பெரும்பான்மையான கட்சிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைப்பதை, தான் மிகவும் விரும்புகிறார் எனவும் அவர் கூறினார்.

அவ்வாறு முன்வைக்கப்படும் யோசனைகள் இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவகையிலேயேயொழிய,சர்வதேசசமூகங்களை மகிழ்விக்கும் நோக்கம் கொண்டவையாக இருக்கவேண்டுமல்ல எனவும் ஜனாதிபதி அங்கு கருத்துத் தெரிவித்தார்.- இவ்வாறு இச்சந்திப்பு தொடர்பாக ஜனாதிபதிச் செயலகச் செய்திக் குறிப்பு தெரிவித்தது. (சி)


விற்பனைக்கு

புதிய
Washing mechine
fully Automatic,
fan,deck
மற்றும் மேசைகள்
122/1, மருத்திந்துறை வீதி,
(நாவலர் கல்விநிலையம் முன்புறம்)
து.செல்வராசா
077 9491020
0779235968



தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான
புலமைப்பரிசில் 2008
பயிற்சிப்பரீட்சை 6
நாளை (18.11.07)
காலை- 8.30
காலை 10.30
மாலை 2.30
(3 நேரங்களில்விரும்பிய நேரத்தில் தோற்றலாம்)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.